வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 03.12.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 363 | பக்கங்கள் : 16




# தீவகத்தில் அமைத்துவரும் சூரிய சக்தி மின் திட்டத்தை இடைநிறுத்தியது சீனா

## மூன்றாம் தரப்பில் எழுந்த பாதுகாப்பு கரிசனையே காரணமாம்

யாழ்ப்பாணம், டிசெ. 03

நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு பகுதிகளில் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கும் பணிகளை இடைநிறுத்துவதாக சீனா அறிவித்துள்ளது.

இலங்கைக்கான சீன தூதரகம் தனது ருவிட்டர் தளத்தில் இந்தத் தகவலைப் பதிவிட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் சம்பந்தமாக மூன்றாம் தரப்பு ஒன்றிலிருந்து எழுந்துள்ள பாதுகாப்பு கரிசனை கருதி இந்த வேலைத் திட்டம் இடைநிறுத்தப்படுவதாக அந்த ருவிட்டர் 15

# ஒமைக்ரோனை எதிர்கொள்ள ஒரே சிறந்த வழி தடுப்பூசியே!

## மருத்துவ நிபுணர்கள் கூட்டாகத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 03

கொரோனா வைரஸின் ஒமைக்ரோன் திரிபு நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க முடியாது. அதை எதிர்கொள்ள சிறந்த ஒரேவழி தடுப்பூசிகளை விரைவாகப் பெற்று எதிர்ப்பு சக்தியை ஆரோக்கியமான நிலையில் வைத்திருப்பதே என்று மருத்துவ நிபுணர்கள் நேற்று தெரிவித்தனர். 15



# ஒதியமலை படுகொலை நினைவுநாள் அனுஷ்டிப்பு!

முல்லைத்தீவு, டிசெ. 03

ஒதியமலையில் இராணுவத்தினராலும் சிங்கள குண்டர்களாலும் கொல்லப்பட்ட 27 பேரினதும், காணாமல் ஆக்கப்பட்ட 5 பேரினதும் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று இடம்பெற்றது. 15

# தொற்றால் 27 பேர் பலி!

கொழும்பு, டிசெ. 03

கோவிட்-19 தொற்றால் நாடு முழுவதும் நேற்று முன்தினம் 27 உயிரிழப்புகள் பதிவாகின என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று வியா 15

# ஒமைக்ரோன் திரிபு வைரஸ் இந்தியாவுக்கும் பரவியது

புதுடில்லி, டிசெ. 03

ஒமைக்ரோன் மாறுபாட்டின் இரண்டு கோவிட்-19 நோயாளிகள் இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளனர் என்று இந்திய சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

இரண்டு தொற்றாளர்களும் கர்நாடகா மாநிலத்தை சேர்ந்தவர்கள். அந்த இருவரும் 66 மற்றும் 46 வயதுடையவர்கள் ஷ 15

# ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் நேற்று திறந்துவைக்கப்பட்டது!

## த. தே. கூட்டமைப்பினர் பங்கேற்கவில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 03

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் "தூய நகரம்" திட்டத்திற்கு அமைவாக தியாகி அறக்கொடையின் நிறுவுநர் வாமதேவா தியாகேந்திரனின் நிதியுதவியுடன் சீரமைக்கப்பட்ட ஆரிய குளம் மகிழ்வூட்டும் திடல் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று மாலை 15



# நேற்றும் இரு சடலங்கள் வடமராட்சியில் ஒதுங்கின!

## அச்சத்தில் கரையோர மக்கள்

வடமராட்சி, டிசெ. 03

வடமராட்சி கடற்பரப்பில் நேற்றும் இரு சடலங்கள் கரையொதுங்கின. கடந்த 6 நாட்களில் யாழ்ப்பாணத்தில் கரையொதுங்கிய ஆறாவது சடலம் இதுவாகும். 15

# எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பதற்கு காரணம்?

## ஜே.வி.பி. உறுப்பினர் சபையில் விளக்கம்

கொழும்பு. டிசெ 03

இலங்கையில் 12.5 கிலோ நிறைகொண்ட எரிவாயு சிலிண்டர்களில் 9.5 நிறை கொண்ட எரிவாயு மாத்திரமே நிரப்பப்பட்டது.இதன் காரணமாக கொள்கலன்களில் வெற்றிடம் அதிகமானது. அத்துடன் புரொப்பெய்ன் பியூட்டன் கலவைகளும் மாற்றப்பட்ட போது கொள்கலன்களில் உள்ள வெற்றி 15

# எமக்கென்று துறைமுகம் இல்லாத நிலை ஏற்படும்

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 03

கொழும்பு துறைமுகத்தின் 13ஏக்கர் காணியை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 150 டொலர் மில்லியனுக்கு முதலீடாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.தொடர்ந்து துறைமுகத்தின் வளங்களை விற்பனை செய்துவந்தால் 15



## ஒமைக்ரோனை எதிர்கொள்ள...

ஸ்ரீ ஜெயர்வர்த்தனபுர பல்கலைக்கழ கத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் பிரிவின் தலைவர் மருத்துவர் சந்திம ஜீவந்திர, "புதிய திரி புக்கு முகங்கொடுப்பதற்கு பூஸ்டர் டோஸைப் பெறுவது மிகவும் இன்றிய மையாதது", என்றார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் மெய் நிகர் வழியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசியபோதே மருத்துவ நிபு ணர்கள் மேற்கண்ட விடயங்களை தெரி வித்தனர்.

இந்தக் கூட்டத்தில் மேலும் பேசிய மருத்துவர் சந்திம ஜீவந்திர, புதிய திரி புக்கு எதிரான தடுப்பூசியின் செயல்திறன் குறித்த தரவு தற்போது கிடைக்கவில்லை. என்றாலும் மக்களின் நோய் எதிர்ப்பு சக் தியை ஆரோக்கியமான விகிதத்தில் வைத் திருப்பது முக்கியமானது.

கொரோனாவை எதிர்கொள்ள தடுப் பூசிகள் உதவின. எனினும், பின்னர் தோன் றிய டெல்டா போன்ற பிற வகைகளுக்கு எதிராக பயனுள்ளதாக இருந்தன. எனவே, புதிய திரிபுக்கு எதிராகவும் தடுப்பூசிகள் செயல்படும் என்று நம்புகிறோம் - என் றார்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத் தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு அறிவியல் துறையின் பேராசிரியர் நீலிகா மாளவிகே,

பூஸ்டர் டோஸை சரியாகக் கையாள் வதன் மூலம் உலகின் பிற நாடுகள் புதிய திரிபை எதிர்கொள்ளத் தயாராகி வருகின் றன. இங்கிலாந்தில் 18 வயதுக்கு மேற் பட்ட அனைவருக்கும் பூஸ்டர் டோஸ் வழங்க முடிவு செய்துள்ளனர். தடுப் பூசியை விரைவாகப் பெறுவது உங்கள் பொறுப்பு - என்றார்.

இலங்கைக்கு, இதுவரை 3 கோடியே 58 இலட்சம் டோஸ்கள் கிடைத்துள்ளன. இதில் 3 கோடியே 4 இலட்சம் டோஸ்கள் பயன்படுத்தப்பட் டுள்ளன. மேலும் ஒரு கோடியே 40 இலட் சம் டோஸ்களைப் பெறுவதற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 20 இலட்சம் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன. மீதமுள் ளவை வாரந்தோறும் கிடைக்கப்பெறும் - என்று சுகாதார அமைச்சின் செயலாளர் சஞ்சீவ முனசிங்க தெரிவித்தார். (ஐ)

## எரிவாயு...

டங்களின் ஊடாக அழுத்தம் அதிகரித்து சிலிண்டர்களில் கசிவு ஏற்பட்டு வெடிக் கின்றன என ஜே .வி.பி. எம்.பி.யான விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற துறைமுகங்கள் அமைச்சு மற்றும் நீர் வழங்கல் அமைச் சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறு கையில்,

இலங்கையின் சமையலறையிலேயே பாதுகாப்பு இல்லாத நிலையில் இந்த அரசினால் எப்படி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தமுடியும் ? 12.5 கிலோ நிறைகொண்ட எரிவாயு சிலிண்டர்களில் 9.5 நிறை கொண்ட எரிவாயு மாத்திரமே நிரப்பப்பட்டது.இதன் காரணமாக சிலிண் டர்களில் வெற்றிடம் அதிகமானது. அத்துடன் புரொப்பெய்ன் பியூட்டன் கலவைகளும் மாற்றப்பட்டபோது சிலிண்டர்களில் உள்ள வெற்றிடங்களின் ஊடாக அழுத்தம் அதிகரித்து சிலிண் டர்களில் கசிவு ஏற்படுகிறது.

சிலிண்டர்களில் கலவை மாற்றப்பட்டு நிறையும் குறைக்கப்பட்டபோது, அதற்கு ஈடு செய்யும் வகையில் ரெகுலேட்டர் களும் இணைப்புக் குழாய்களும் மாற்றப் பட்டிருக்க வேண்டும்,எனினும் அது செய் யப்படாத காரணத்தினாலேயே இன்று எரிவாயு சிலிண்டர்களில் வெடிப்புகள் ஏற்படுகின்றன.

இவ்வாறான நிலையில் இந்த ஆபத் தான விடயம் தொடர்பில் ஜனாதிபதி உடனடியாக செயற்படாமல், இரண்டு வாரங்களில் அறிக்கையை பெற்று தீர் வைக் கொடுப்பதாக கூறுகின்றார். அதற் குள் பல இடங்களில் எரிவாயு சிலிண்டர் வெடிப்புக்கள் ஏற்பட்டுவிடும். எனவே சிலிண்டர்களை திரும்பப்பெற்று அதற்கு பதிலாக புதிய சிலிண்டர்களை விநியோகிக்கவேண்டும்

இதேநேரம் அம்பாந்தோட்டை துறை முகத்தை சீனாவுக்கு வழங்கி அதற்கு விசேட வரிச்சலுகை வழங்குவதற்கான யோசனைக்கு மஹிந்த ராஜபக்ஷ தலை மையிலான எம்.பி.க்கள் எதிராக வாக் களிக்கவில்லை.எனவே அந்த துறைமுக விற்பனைக்கு மஹிந்த ராஜபக்ஷ தரப் பினரும் பொறுப்பேற்கவேண்டும். அன்று அதற்கு எதிராக ஜே.வி.பி. மாத் திரமே வாக்களித்தது.

இன்று பெரும்பாலான தோட்டங் களில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வசதி செய்துகொடுக்கப்படாதபோதும் பெருந்தோட்ட பகுதிகளில் இருந்து ஏனைய இடங்களுக்கு குடிநீர் திட்டங் கள் கொண்டு செல்லப்படுகின்றன உரிய வேதனம் கிடைக்காமல், கோதுமா மாவின் விலையதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள, நாட்டுக்கு அதிக அந்நிய செலவாணியை பெற்றுக்கொடுக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு குடிநீரையாவது பெற்றுக்கொடுக்கவேண்டும் என்றார்.

## ஆரியகுளம்...

5.30 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகர முதல்வரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாக ராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக தியா கந்திரன் அர்ச்சுனா மற்றும் நிலாஜினி தியாகேந்திரனும் கலந்து கொண்டனர்.

ஆரியகுளத்தின் வரலாற்றை எடுத்துக் கூறும் வகையில் நினைவுக்கல் மூன்று மொழிகளிலும் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன், ஆரியகுளம் பெயர் பொறிக் கப்பட்ட எழுத்துரு திரைநீக்கம் செய்யப் பட்டு, ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறந்து வைக்கப்பட்டது.

ஆரியகுளத்தை அழகுபடுத்தும்வேலைத் திட்டத்தை தன் செலவில் முன்னெடுத்த தியாகி அறக்கொடையின் நம்பிக்கை பொறுப்பாளர் வாமதேவா தியாகேந் திரனுக்கு "அறக்கொடை அரசன்" எனும் நாமம் சூட்டி மாநகர சபையால் மதிப் பளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வாண வேடிக்கைகள், தண்ணீர் விசிறல் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன.

மேலும், மதத்தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், மாநகர சபை உறுப்பினர் கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். எனி னும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த மாநகர சபை உறுப்பினர்கள் எவ ரும் இந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நேற்றும் இரு...

தொடர்ச்சியாக வடமராட்சியில் கரை யொதுங்கிய 5ஆவது சடலம் இதுவாகும். இதனால், அந்தப் பகுதி கரையோர மக் களிடையே அச்சத்தையும் பரபரப்பை யும் ஏற்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் வேளையில் பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் ஒரு சடலம் கண்டறியப்பட்டது. இதேபோன்று, வடமராட்சி கிழக்கு - சுண்டிக்குளம் - பூனைத்தொடுவாய் பகுதி யில் நேற்று மாலை ஒரு சடலம் கரை யொதுங்கியது.

கரையொதுங்கிய இந்த சடலங்கள் பலநாட்கள் கடலில் கிடந்தமையால் சற்று உருக்குலைந்துள்ளன. இவற்றை மீட்டுள்ள பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு மணல்காட்டிலும், வல்வெட்டித்துறையிலுமாக இரு சட லங்கள் மீட்கப்பட்டன. மறுநாள் ஞாயிற் றுக்கிழமை நெடுந்தீவில் சடலம் ஒன்று கரையொதுங்கியது. இதனைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியிலும் ஒரு சட லம் கரையொதுங்கியது என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ-3)

## எமக்கென்று...

எமக்கு என துறைமுகம் இருக்காது என எம்.பி.யான திஸ்ஸ அத்தநாயக்க தெரி வித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற துறைமுகங்கள் அமைச்சு மற்றும் நீர் வழங்கல் அமைச் சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறு கையில்,

நாட்டின் துறைமுகங்கள் தேசிய வரு மானத்தின் கேந்திர நிலையங்களாகும். குறிப்பாக கொழும்பு துறைமுகம் தெற் காசியாவில் மிகவும் முன்னணியில் இருக் கின்றது. அது எமது தேசிய வருமானத் துக்கு பெரும் சக்தி . கொழும்பு துறை முகத்தின் கிழக்கு முனையத்தை அபி விருத்தி செய்ய பல முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. இறுதியில் இந்த அரசு கிழக்கு முனையத்தை விற்பனை செய்ய முற்பட்டபோது அதற்கு எதிராக பாரிய எதிர்ப்பு ஏற்பட்டது. அதனால் அரசு அந்த தீர்மானத்தில் இருந்து பின்னுக்கு சென்றது. என்றாலும் தற்போது அரசாங் கம் கொழும்பு துறைமுகத்தின் அபிவி ருத்திக்கு என்ன நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதை கூற வேண்டும்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்கி 325 மில்லியன் டொலர் கடன் பெறுவதற்கு அரசு முயற்சித்து வருகின்றது. அரசிடம் டொலர் பற்றாக் குறை இருந்து வருகின்றமையே இதற்கு காரணம். கிழக்கு துறைமுகத்தின் மொத்த நீளம் 1360 மீற்றர் . அதில் 600மீற்றரே அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றது. எஞ்சிய பகுதியை விரைவாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால், எமது கடலை சுற்றி முனை யங்கள் உருவாகினால் சர்வதேச ரீதியில் முன்னணியில் இருக்கும் எமது துறைமுகம் இல்லாமல்போகும். இந்த முனையத்துக்கு தேவையான பாரம் தூக்கிகளை கொள்வனவு செய்யும் நட வடிக்கை தொடர்ந்து தாமதித்து செல் கின்றது. முனையத்துக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு அரசு பின்வாக்குவது இந்த முனை யத்தை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கு வதற்கா என்ற சந்தேகம் எழுகின்றது.

மேலும் அரசு டொலர் பெற்றுக்கொள் வதற்காக எமது வளங்களை முதலீடு என்ற பெயரில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துவருகின்றது. குறிப்பாக கொழும்பு துறைமுகத்தின் 13ஏக்கர் காணியை தனி யார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட் டிருக்கின்றது. இந்த காணியை அபிவி ருத்தி செய்து லாபமீட்டும் நடவடிக் கையை துறைமுகத்துக்கு செய்ய முடி யும். அவ்வாறு இருந்தும் 150 மில்லியன் டொலருக்கு தனியார் நிறுவனத்துக்கு முதலீடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. எந்தவித கேள்விக் கோரலும் இல்லாமல் 70வீதம் குறித்த தனியார் நிறுவனத்துக்கு வழங்கி இருப் பதுடன் அதில் 15வீதம் தேசிய முதலீட் டாளருக்கு வழங்குவதாக தெரிவித்திருக் கின்றது. ஆனால் அந்த தேசிய முதலீட் டாளர் யார் என்பதை அரசு வெளிப் படுத்தவில்லை.

எனவே இவ்வாறு தொடர்ந்து துறை முகத்தின் வளங்களை விற்பனை செய்து வந்தால் எமக்கு என துறைமுகம் இருக் காது. முதலீடு என்பது வளங்களை விற் பனை செய்வதல்ல. கடந்த அரசு களும் துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கி இருக்கின்றன. ஆனால் விற்பனை செய்யவில்லை. அதனால் கொழும்பு துறை முகத்தின் கிழக்கு முனையம் என்பது தங்க பூதம். அதனை அபிவிருத்தி செய்து தேசிய வருமானத்தை அதிகரித்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றார்.

## ஒமைக்ரோன் திரிபு...

என சுகாதார அமைச்சகத்தின் இணைச் செயலாளர் லாவ் அகர்வால் செய்தி மாநாட்டில் தெரிவித்தார்.

அவர்களின் தனியுரிமையைப் பாது காக்க அவர்களின் அடையாளங்களை இப்போது வெளியிட முடியாது என்று கூறினார்.

இரண்டு நோயாளிகளுடன் தொடர் பில் இருந்த அனைவரும் கண்டுபிடிக் கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றனர் - என்றார்.

கொரோனா வைரஸின் ஒமைக்ரோன் திரிபு தென்னாபிரிக்காவில் முதன்முத லில் கண்டறியப்பட்டது. தற்போது கிட் டத்தட்ட 30 நாடுகளில் அந்த திரிபு பரவி யுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒதியமலை...

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைக்குள் கடந்த 1984ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி அதிகாலை வேளை புகுந்த இராணு வமும் சிங்கள குண்டர் கும்பலும் அங் கிருந்த இளைஞர்கள் மற்றும் ஆண்களை அங்குள்ள சனசமூக நிலையத்துக்கு வர வழைத்தது. அவர்களின் ஆடைகளை களைந்து கைகளை கட்டிய பின்னர், அவர்களை சுட்டும் வெட்டியும் கொடூர மாகக் கொன்றது.

இவ்வாறு மிலேச்சத்தனமாக 27பேர் கொல்லப்பட்ட நிலையில், 5 பேர் பிடித் துச் செல்லப்பட்டனர். இவர்கள் எங்கே? இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இன்றுவரை தெரியாத போதிலும், அவர்களையும் கொல்லப்பட்டவர்களா கவே அவர்களின் உறவினர்கள் கருதுகி றார்கள்.

இந்த நிலையில் 32 பேரின் 37ஆவது ஆண்டு நினைவு தினமான நேற்று ஒதிய மலை சனசமூக நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் உணர்வுபூர்வமாக உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து ஒதியமலை பிள் ளையார் ஆலயத்தில் படுகொலை செய் யப்பட்டவர்களுக்காக விசேட ஆத்ம சாந்திப் பூசை வழிபாடுகளும் இடம் பெற்றன. (ஐ)



## தொற்றால்...

ழுக்கிழமை தெரிவித்தது.

இதன்படி, 30 - 59 வயதுக்கு இடைப் பட்ட 5 ஆண்கள், 3 பெண்களுமாக 8 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 11 ஆண்களும், 8 பெண்களுமாக 19 பேரும் என 27 பேர் நேற்று முன்தினம் உயிரிழந் தனர்.

இதனால், நாட்டில் தொற்றால் உயிரி ழுந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 399 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## தீவகத்தில்...

பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இதே மாதிரியான 12 தீவு களில் கலப்பு மின்னுற்பத்தி மையங்களை அமைக்கும் வேலைத் திட்டம் ஒன்றுக் காக மாலைதீவு அரசாங்கத்துடன் கடந்த 29ஆம் திகதி சீனாவின் நிறுவனம் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இருப்பதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களில் சூரிய சக்தி மின் உற் பத்தி நிலையங்களை சீனா அமைப்பதற் கான வேலைத் திட்டத்துக்கு அமைச் சரவை அனுமதி வழங்கியிருந்தது.

எனினும், இந்த விடயம் தொடர்பில் இந்தியா தனது கரிசனையை வெளியிட் டதுடன், தமிழ் அரசியல் கட்சிகளும் எதிர்ப்பை வெளியிட்டன. இந்த நிலை யிலேயே சீனா இந்த வேலைத்திட்டத்தை இடைநிறுத்தியுள்ளது. (ஐ)

# 2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் நாட்டில் மீண்டும் மலேரியா!

## காலியில் ஒருவர் அடையாளம்!!

கொழும்பு, டிசெ. 03

காலி, நெலுவ என்ற பிரதேசத்தில் மலேரியா நோயாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உகண்டாவில் பணியாற்றிய அவர் மூன்று மாதங்களுக்கு முன்னர் இலங்கை திரும்பினார் என தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சந்திம சிறிதுங்க தெரிவித்தார்.

கடந்த 27 ஆம் திகதி அவசர சுகவீனம் காரணமாக அவர், உடுகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதன்போது, மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர் மலேரியாவினால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

இலங்கையில் கடந்த 2012 ஆம் ஆண்டில் இறுதியாக மலேரியா நோயாளியொருவர் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

அதன் பின்னர், மூன்று வருட காலப்பகுதியில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட எவரும் அடையாளம் காணப்படாததால், இலங்கை மலேரியா நோயற்ற நாடாக 2016 ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சட்டவிரோதமாக இந்தியா செல்வோரால்

# மன்னாரில் எச்.ஐ.வி தொற்று அதிகரிக்கக்கூடிய சாத்தியம்!

மன்னார், டிசெ. 03

இந்தியாவுக்கு சட்டவிரோதமாக கடல் வழியாக சென்று வருகின்றவர்கள் மற்றும் போதைப்பொருள் பாவனையினால் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக பாலியல் நோய் மற்றும் எச்.ஐ.வி மருத்துவ விசேட வைத்திய அதிகாரி தக்சாயினி மகேந்திரநாதன் தெரிவித்தார்.

உலக எய்ட்ஸ் தினத்தை யொட்டி மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவுக்கு சட்டவிரோதமாக கடல் வழியாக சென்று வருகின்றவர்கள் மற்றும் போதைப்பொருள் பாவனையினால் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இதனை கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர் தமது தடுப்பு நடவடிக்கை வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த நடவடிக்கைகளுக்கு மக்களின் ஆதரவை எதிர்பார்த்துள்ளோம். மக்கள் இவ்விடயத்தில் விழிப்புடன் இருந்து எமது சுகாதாரத்துறைக்கு ஆதரவு வழங்கவேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை 11 எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு தொற்றாளர் இவ்வருடம் 2021 ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்டுள்ளார்-என்றார்.

உலக எயிட்ஸ் தினத்தை யொட்டி மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தலைமையில் விழிப்புணர்வு கருத்தரங்கு இடம் பெற்றது.

இந்த கருத்தரங்கில் வைத்தியர்கள்,அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள், பொலிஸார் , ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)



# நல்லூர் பகுதியில் நேற்று எரிவாயு அடுப்பு வெடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 03

நல்லூர்ப் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

நல்லூர் கோவில் வீதியில் உள்ள ஒரு வீட்டில் மதிய உணவு தயாரித்துக்கொண்டிருந்தபோது அடுப்பு தீப்பற்றியதை அவதானித்த வீட்டு உரிமையாளர் வெளியில் ஓடிச் சென்று முன்னால் வர்த்தக நிலையத்தில் இருந்தவர்களை அழைத்துள்ளார்.

இதன்போது உடனடியாக ஓடிச் சென்ற வர்த்தக நிலையத்தினர் எரிவாயு சிலிண்டரை அகற்றி தீயை அணைத்தமையால் சேதங்கள் எதுவும் ஏற்படாது தடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக இலங்கை முழுவதும் எரிவாயு அடுப்புகள், எரிவாயு சிலிண்டர்கள் வெடித்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையிலேயே நல்லூர் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்த சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ-03)

## பஸ் கட்டணம் உயர்வு குறித்து எந்தவித தீர்மானமும் இல்லை



கொழும்பு, டிசெ. 03

பஸ் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் எவ்வித தீர்மானமும் இதுவரை இல்லை என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

ஜனவரி மாதம் முதல் பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன விடுத்துள்ள கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, தமது பஸ்களில் பயன்படுத்தப்படும் எரிபொருள் தரமற்றவையென இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

### கல்வி TV CHANNEL-1 — 03.12.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### கல்வி TV CHANNEL - 2 — 03.12.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
03.12.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## கூட்டமைப்பை பதிவு செய்தல்?

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி - தேர்தல் ஆணைக்குழுவால் ஒரு கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான முயற்சியை குறித்த கூட்டணியின் தலைவர்கள் மேற்கொண்டிருந்த நிலையிலேயே, அவர்களின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் இதுவரையில் ஒரு தேர்தல் கூட்டாக செயல்பட்டவர்கள் - இப்போது ஒரு கட்சியாக பரிணமித்திருக்கின்றனர். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. மலையக மக்களின் நலனை கருத்தில் கொண்டு, ஒற்றுமை அவசியமென்று கருதியதால், அவர்களால் இதனை இலகுவாக சாதிக்க முடிந்திருக்கின்றது.

ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும், 2015 ஜூன் மாதத்திலிருந்து, புரிந்துணர்வு உடன்பாடொன்றின் அடிப்படையில் இணைந்து செயல்படும் முடிவை எட்டியிருந்தனர். இதன் பின்னர் இடம்பெற்ற அனைத்துத் தேர்தல்களின்போதும், தமிழ் முற்போக்கு கூட்டணி என்னும் பெயரிலேயே தேர்தல்களை எதிர்கொண்டிருந்தனர். இந்த நிலையிலேயே தற்போது ஒரு தனிக் கட்சியாகத் தங்களைப் பதிவு செய்திருக்கின்றனர். வயதில் மட்டுமன்றி அரசியல் அனுபவத்திலும் சம்பந்தனுக்கு மிகவும் இளையவர்களான அவர்களால் விட்டுக்கொடுப்புடன், மக்களின் நலனை கருத்தில்கொண்டு, ஒரு தனிக்கட்சியாகத் தங்களை முன்னிறுத்துவதில் வெற்றி பெற்றிருக்கின்றனர். மலையக அரசியலில் அவர்கள் ஒரு தவிர்க்க முடியாத இடத்தை நிச்சயம் பெறுவார்கள்.

இந்த அனுபவத்திலிருந்து கூட்டமைப்பை திரும்பி பார்த்தால் - கூட்டமைப்பு தோல்வி அனுபவத்துடன் காட்சியளிக்கின்றது. ஒரு மூத்த தலைவரான சம்பந்தனால் விட்டுக் கொடுப்புகளுடன் கூட்டமைப்பை ஒரு வலுவான அரசியல் கட்சியாகப் பேணிப் பாதுகாக்க முடியவில்லை. கூட்டமைப்பின் உள் பிரச்னைகள் பொது வெளிகளில் பேசப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மட்டும், கூட்டமைப்பு தொடர்பில் கவலைப்படும் ஒரு சாதாரண நபராகவே சம்பந்தன் இப்போதும் இருக்கின்றார்.

கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்ய வேண்டுமென்னும் கோரிக்கை பலராலும் - தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றது. இது தொடர்பில் சம்பந்தனிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. தமிழ்த் தேசியத்தின்மீது கரிசனை கொண்டிருந்த பலரும் தன்னார்வ அடிப்படையில் இது தொடர்பில் தொடர்ச்சியாக பொதுவெளிகளில் பேசி வந்திருக்கின்றனர். ஆனால், சம்பந்தன் இணங்கவில்லை. தமிழ் அரசு கட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் மட்டும்தான், மற்றவர்கள் எப்போதுமே இருக்க வேண்டுமென்னும், ஆண்டான் அடிமை மனோபாவத்துடனேயே, கூட்டமைப்பை வழிநடத்த முற்பட்டார். பங்காளிக் கட்சிகள் மத்தியில் கடுமையான அதிருப்திகள் இருந்தபோதிலும் கூட, தேர்தல் இலக்குகளை கருத்தில் கொண்டு அவர்கள் அமைதி காத்தனர். கூட்டமைப்பின் உள் முரண்பாடுகளை சம்பந்தன் ஆக்கபூர்வமாகக் கையாளாத காரணத்தால்தான், உள் முரண்பாடுகள் தொடர்ந்தும் கூர்மையடைந்து சென்றன. இதன் இன்றைய நிலைமை என்ன? சம்பந்தனுக்கு பின்னர் இருக்குமா - அல்லது இருக்காதா - என்னும் கேள்வியுடன் கூட்டமைப்பின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

கூட்டமைப்பை பதிவு செய்வதற்குத் தடையாக இருந்ததும் - தமிழ் முற்போக்கு கூட்டணியை பதிவு செய்வதற்கு சாதகமாக இருந்ததும் என்ன? மனோ கணேசனால் எவ்வாறு இவ்வாறானதொரு தலைமைத்துவத்தைக் கொடுக்க முடிந்தது? ஏன் சம்பந்தனால் அப்படியானதொரு தலைமைத்துவத்தைக் கொடுக்க முடியவில்லை? பதில் சுலபமானது. மனோ கணேசன் தனது கட்சி மட்டும்தான் தனித்துவமானது - புனிதமானது - என்று அடம்பிடிக்கவில்லை. தனித்துச் செயல்படுவதிலுள்ள பலவீனங்களையும் - இணைந்து செயல்படுவதிலுள்ள பலமான அம்சங்களையும் சரியாக நிறுத்துப் பார்த்தபோது - எடுக்க வேண்டிய முடிவும் - போக வேண்டிய இடமும் அவர்களுக்குத் துல்லியமாக விளங்கியது. விட்டுக் கொடுப்புடன் விடயத்தை வெற்றிகொண்டனர்.

ஆனால், சம்பந்தனோ மக்களை விடவும் தனது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்திருந்தார். இதன் விளைவாக கூட்டமைப்பின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. ஆனால், இப்போதும் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்வதற்கான காலம் இருக்கின்றது. பங்காளிக் கட்சிகள் இது தொடர்பில் சிந்திக்கலாம். மனோ கணேசன் போன்று - சித்தார்த்தனோ அல்லது செல்வம் அடைக்கலநாதனோ சிந்திக்கலாம் அவ்வாறு சிந்தித்தால் மக்களின் ஆதரவை நிச்சயம் திரட்டலாம்.

# இந்திய பொருளாதாரம்!

-அலசுவது இராஜதந்திரி-



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இந்த விஜயத்தின்போது இந்தியாவிடமிருந்து நிதியுதவிகளைப் பெறுவது சம்பந்தமாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரை சந்தித்து இலங்கைக்கு இந்தியாவிடமிருந்து நிதி உதவி பெறுவது பற்றி உரையாடுவதோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்புக் குறித்தும் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தெற்காசிய நாடுகளைப் பொறுத்தவரை இந்தியா ஒரு முன்மாதிரியான பொருளாதாரத்தை கொண்டுள்ளது. இந்தியாவின் நவீன பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டவர் முன்னாள் நிதி அமைச்சரும், பின்னர் இந்தியாவின் பிரதமராகவும் பதவிவகித்த கலாநிதி மன்மோகன் சிங் என்பது குறிப்பிடத்தக்கது.

இருபத்தியோராம் நூற்றாண்டுக்கு ஏற்ற வகையில் அதிநவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு மத்தியில் இந்தியாவின் பாரம்பரிய சிறுகைத்தொழில் நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இந்திய பொருளாதாரத்தை கட்டியெழுப்பியிருந்தார் பொருளியல் நிபுணரான இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்.

எனவே, 21ஆம் நூற்றாண்டு உலகளாவிய ரீதியில் பலதரப்பட்ட மாற்றங்களோடு உதயமானபோது இந்தியா அந்த மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் தன்னை மாற்றிக்கொண்டதோடு புதிய பொருளாதார நடைமுறைகளையும் வடிவமைத்துக்கொண்டது. ஆசியப் பிராந்தியத்தில் அரசியலில் ஜனநாயக ரீதியாக உயிர்த்துடிப்புடன் இயங்கும் இந்தியா, பொருளாதார ரீதியாகவும் சிறு கைத்தொழில்கள் முதற்கொண்டு பெரும் கைத்தொழில்களையும் வடிவமைத்துள்ளது.

இந்தியாவில் வீதியோர வியாபாரிகள் முதற்கொண்டு பெரும் தொழில் அதிபர்கள் வரை இந்திய பொருளாதாரத்தின் நாடி நரம்பாக இருந்து வருகின்றனர். இந்திய தொழில் அதிபர்களான டாட்டா, பிர்லா, அம்பானி, லக்ஷ்மி மித்தால் ஆகியோர் சர்வதேச ரீதியாகவும் தமது கைத்தொழில் வலையமைப்பை பேணிவருகின்றனர்.

இந்திய உருக்குத் தொழிலில் சர்வதேச ரீதியாக ஒரு சாம்ராச்சியத்தையே வைத்திருக்குமளவுக்கு லக்ஷ்மி மித்தால் விளங்குகின்றார். இந்தியாவின் செல்வத்துக்குரிய தெய்வமாக வழிபடும் லக்ஷ்மியை தனது பெயரில் வைத்துள்ள லக்ஷ்மி மித்தால் உலக செல்வந்தர் வரிசையில் ஒருவராக விளங்குவதில் ஆச்சரியமில்லை என்று மேற்கத்தேய சஞ்சிகையொன்று வேடிக்கையாகவும் குறிப்பிட்டிருந்தது.

இந்தியாவின் பொருளாதாரத்துக்கு இந்தியா சுதந்திரமடைந்தபோதே மிக ஆழமாக அத்திபாரமிடப்பட்டிருந்தது. இந்தியா ஆன்மீகத்தில் ஊறித்திளைத்த நாடாகும். சிந்து வெளி நாகரிக காலத்தின் ஆய்வுகளின்படி இந்தியா வரலாற்று ரீதியாகவே ஆலயங்கள் வழிபாட்டுத் தலங்களை இமயம் முதல் கன்னியாகுமரி வரை கொண்டிருக்கும் நாடாக இருக்கின்றது.

இந்தியாவின் ஆன்மீக பாரம்பரியங்களின் மகத்துவத்தை பேணியவராக பொருளாதார ஈடேற்றத்துக்காகக் குரல் கொடுத்த ஜவஹர்லால் நேரு கருத்து வெளியிடுகையில் தொழிற்சாலைகளே நான் வணங்கும் ஆலயங்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதன் அடிப்படையில் இன்று இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சிறிதும் பெரிதுமாக தொழிற்சாலைகள் வியாபித்து கோடிக்கணக்கானவர்களின் ஈடேற்றத்துக்கு வழியமைப்பவையாக இருக்கின்றன. இந்திய பொருளாதாரம் உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகளால் மட்டுமல்ல. இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்ததாகவே காணப்படுகின்றது. இருந்தபோதிலும் எந்தவொரு சவாலையும் தாக்குப்பிடிக்குமளவுக்கு இந்தியாவின் பொருளாதார கட்டமைப்பு காணப்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டில் மேற்கத்தேய பொருளாதாரமே மேலோங்கி இருந்தது. ஆனால், இருபத்தியோராம் நூற்றாண்டில் கிழக்கே பொருளாதார மறுமலர்ச்சி அபரிமிதமாக காணப்படுகின்றது.

ஜப்பான், தென்கொரியா, சிங்கப்பூர், மலேசியா உட்பட நீண்டகால வல்லரசுக் கெடுபிடி யுத்தங்களால் துவண்டு போயிருந்த வியட்நாம்கூட தற்போது பொருளாதார ரீதியாக பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளது.

இலங்கையைப்பொறுத்தவரை வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படாதவரை அரசியல் ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ ஈடேற்றத்தைக்காண முடியாத நிலையே தொடர்ந்து காணப்படும்.

இந்நிலையில் வடக்கு - கிழக்கில் இந்தியாவின் உதவியோடு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் முற்றுமுழுதாக வடக்கு - கிழக்கில் அமுலாக்கப்படும் பட்சத்தில் அந்த இரு மாகாணங்களின் வளங்களும் முற்றுமுழுதாக பயன்படுத்தப்பட்டு இலங்கையும் பொருளாதார ரீதியாக தலைநிமிர முடியுமென்றே எதிர்பார்க்க முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 03 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை - 17
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சதுர்த்தசி




03.12.2021

**மேடம்**
பேச்சு, செயல்களில் இன்று மிகவும் கவனமாக இருக்கவும். இன்று நன்மைகளை எதிர்பார்க்கலாம். ஆன்மிகப் பணி செய்வீர்கள். விலகிச் சென்ற கூட்டாளிகள் மீண்டும் வந்து சேரலாம்.

**இடபம்**
மனதில் உற்சாகம் நிலவும். சேமிப்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கலகலப்பான நாள். வியாபாரிகள் கொடுக்கல், வாங்கலை ஒழுங்குபடுத்துவீர்கள்.

**மிதுனம்**
உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டிய நாள். இன்று முக்கிய முடிவு எடுப்பீர்கள். பாதியில் நின்ற விஷயத்தை தொடருவீர்கள். குழந்தைகளின் முன்னேற்றமும், உயர்வும் உங்களை மகிழ்விக்கும்.

**கடகம்**
உற்சாகத்துடன் செயல்பட்டு சூழலை கலகலப்பாக்குவீர்கள். மனநிம்மதி அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். பணப்பற்றாக்குறை தீரும். உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்**
உங்களிடம் உள்ள நிலத்தை நல்ல விலைக்கு விற்பீர்கள். பேச்சில் கவனம் தேவை. பயணத்தால் உற்சாகம் கூடும். பிறருக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பயம் ஒன்று தீரும்.

**கன்னி**
துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். வீண் விரயம் குறையும். நீங்கள் எதிர்பார்த்த உதவிகள் எளிதில் கிடைக்கும். நிம்மதி ஏற்படும். உறவினர்களால் நன்மை ஏற்படும். உழைப்பால் ஆதாயம்.

**துலாம்**
நீங்கள் தொட்டது துலங்கும் நாள். நட்பால் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீடு, நிலம் போன்றவை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய நண்பர்கள் சிறப்பாக அமைவர். தாமதங்கள் நீங்கும்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உள்ள பெரியோரின் உடல்நலம் சீராகும். உற்சாகமாக பணிச்சுமையை சுமப்பீர்கள். யோகமான நாள். புதிய பயணத்திட்டங்கள் உருவாகி உற்சாகத்தைக் கூட்டும்.

**தனுசு**
நிதானமாக செயல்பட்டு முக்கியமான வேலைகளை முடிப்பீர்கள். வேலைப்பளு அதிகரித்தாலும் அதை உற்சாகமாக செய்து முடிப்பீர்கள். தொழிலில் லாபம் வரும். மாணவர்கள் உயர்வடைவீர்கள்.

**மகரம்**
குடும்பத்தில் சிறு சிறு மகிழ்ச்சிகள் ஏற்படும். பணி, வியாபார விஷயம் ஒன்றில் நல்ல தீர்வு காண்பீர்கள் உற்சாகத்துடன் செயல்பட்டு வெற்றிப் பாதையில் பயணிப்பீர்கள்.

**கும்பம்**
நீண்ட காலமாக எதிர்பார்த்த நன்மை ஒன்றை பெறுவீர்கள். வியாபாரிகள் ஓய்வின்றி உழைத்து நன்மை காண்பீர்கள். பணவரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்**
உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சியை முன்னின்று நடத்துவீர்கள். பொருளாதார வளர்ச்சி காரணமாக மகிழ்ச்சி அடைவீர்கள். உற்சாகம் கூடும். செயல்பாடுகளில் கூடுதல் கவனம் தேவை.

# அ.தி.மு.க. தலைமை பதவிகளுக்கான தேர்தல்கள் 7 ஆம் திகதி நடைபெறும்

## கட்சித் தலைமை நேற்று அறிவிப்பு



சென்னை, டிசெ. 03

அ.தி.மு.கவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளருக்கான தேர்தல்கள் டிசெம்பர் 7 ஆம் திகதி நடைபெறும் என்று அக்கட்சி தலைமை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அ.தி.மு.க. தலைமை நேற்று வெளியிட்ட அறிக்கையில், "அ.தி.மு.க. கழக அமைப்பின் பொதுத் தேர்தல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்திட வேண்டும் என்ற விதிமுறைக்கேற்ப, கழக ஒருங்கிணைப்பாளர், கழக இணை ஒருங்கிணைப்பாளர் தேர்தல் டிசெம்பர் 7 ஆம் திததி 7 காலை 10:00 மாலை 5:00 மணி வரை நடக்கும். நடைபெறுகிறது. வேட்புமனுவை 3,4 ஆம் திகதி தாக்கல் செய்ய வேண்டும். வாக்கு எண்ணிக்கை மற்றும் தேர்தல் முடிவு டிசெம்பர் 8 ஆம் திகதி அறிவிக்கப்படும்.

அ.தி.மு.கவின் கிளை, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி நிர்வாகிகளுக்கு டிசெம்பர் 13ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை உட்கட்சி தேர்தல்கள் நடைபெறும்" என்று கூறப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. உட்கட்சித் தேர்தலுக்கும் பொன்னையனும், பொள்ளாச்சி ஜெயராமனும் தேர்தல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக சென்னை நேற்று முன்தினம் அ.தி.மு.கவின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் முக்கியமான சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதில், கழக ஒருங்கிணைப்பாளர், கழக இணை ஒருங்கிணைப்பாளர் ஆகிய இருவரும் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களால் ஒற்றை வாக்கின் அடிப்படையில் இணைந்தே தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்ற சிறப்பு தீர்மானத்தை அதிமுக செயற்குழு கொண்டு வந்தது. இந்த நிலையில் ஒருங்கிணைப்பாளர்களை தேர்வு செய்ய தேர்தலை உடனடியாக அ.தி.மு.க அறிவித்துள்ளது.

# கருணாநிதி குறித்து சர்ச்சைக் கருத்து! வைகோ மீது குற்றப்பத்திரிகை தாக்கல்



சென்னை, டிசெ. 03

தி.மு.க.வின் முன்னாள் தலைவரும், தமிழக முன்னாள் முதலமைச்சருமான மு. கருணாநிதி குறித்து சர்ச்சை கருத்து வெளியிட்டமைக்காக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சென்னை சிறப்பு நீதிமன்றம் இது குறித்த விசாரணையை ஒத்திவைத்தது.

ம.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டு பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டி அளித்த வைகோ, தி.மு.க.வின் அப்போதைய தலைவர் கருணாநிதி குறித்தும், அவரது சாதி குறித்தும் சர்ச்சைக்குரிய வகையில் பேசினாரென தேர்தல் அலுவலர் சங்கீதா என்பவர் எழும்பூர் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இதைத்தொடர்ந்து வைகோ மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கில் பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். நேற்று அந்த வழக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி என்.ஆலிசியா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது வைகோ நீதிமன்றில் முன்னிலையானார்.

அவருக்கு குற்றப் பத்திரிகை நகல் வழங்கப்பட்டது. இதைத்தொடர்ந்து குற்றச்சாட்டு பதிவுக்காக ஜனவரி 4 ஆம் திததிக்கு விசாரணையை நீதிபதி ஒத்திவைத்தார்.

# தொண்டர்கள் கவலைப்பட வேண்டாம் அ.தி.மு.கவில் விரைவில் மாற்றம் வரும்

## சசிகலா அறிக்கை



சென்னை, டிசெ. 03

"அ.தி.மு.க. தொண்டர்கள் யாரும் கவலைப்பட வேண்டாம். விரைவில் நிலை மாறும், தலை நிமிரும்" என்று சசிகலா நேற்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"அநீதியை எதிர்த்தும், துரோகத்தை வீழ்த்தியும் தோன்றியதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இந்த பேரியக்கம். இது உயிர்த் தொண்டர்களின் உழைப்பாலும், தியாகத்தாலும் உருவான ஓர் இயக்கம். நம் புரட்சித் தலைவரும், தன்னை ஒரு முதல் தொண்டனாக கருதி முன்னின்று, எத்தனையோ சூழ்ச்சிகளையும், தடைகளையும் தாண்ட, வென்று எடுத்த ஒரு மாபெரும் இயக்கம்.

அதே போன்று ஜெயலலிதா, எத்தனையோ சோதனையான காலகட்டங்களில், பல்வேறு அடக்குமுறைகளுக்கு அடிபணியாமலும் உறுதியோடு இருந்து, இது தொண்டர்களுக்கான இயக்கம் என்பதை நிலை நிறுத்து சென்றுள்ளார்கள். என் வாழ்நாளில், ஒவ்வொரு நொடிப்பொழுதையும் நம் இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும், வெற்றிக்காகவும் அர்ப்பணித்து, அரசியல் எதிரிகளின் சூழ்ச்சிகளுக்கு இரையாகாமல் கழகத்தையும் கழகத் தொண்டர்களையும் காப்பதே நம் முதல் கடமை என்று கொள்கையை மனதில் கொண்டுதான் எனது வாழ்க்கை பயணம் இந்த நொடியிலும் சென்று கொண்டு இருக்கறது.

அ.தி.மு.க. என்றைக்குமே எளிய தொண்டர்களுக்கான ஓர் இயக்கமாக செயல்பட்டு நாட்டின் மூன்றாவது பெரிய கட்சி என்ற நிலைக்கு சென்றதை யாராலும் மறுக்க முடியாது . ஆனால், இன்றைய நிலையைப் பார்க்கும்போது, இதற்காகவா நம் இருபெரும் தலைவர்களும் தங்கள் இரத்தத்தை வியர்வையாக்கி ஓயாது உழைத்து கழகத்தை காப்பாற்றினார்கள் என்று நினைத்து பார்க்கையில் ஒவ்வொரு தொண்டனின் நெஞ்சமும் குமுறுகிறது.

அனைவரும் கவலைப்படாமல் சிறிது காலம் பொறுத்து இருங்கள். விரைவில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை மாறும், தலை நிமிரும், உண்மைகளும், நியாயங்களும் என்றைக்கும் தோற்றதாக சரித்திரம் இல்லை. எத்தனை இடர்பாடுகள், சோதனைகள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து என் உயிர்மூச்சு உள்ள வரை நம் இயக்கத்தை காத்து, தொண்டர்களின் இயக்கமாக மாற்றும் வரை நான் உழைத்துக் கொண்டே இருப்பேன் ஓய்ந்து விடமாட்டேன்என்று உறுதி கூறுகிறேன்" என்று தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களமிறங்கத் தயார்!

## அர்ஜுன அதிரடி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 03

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கு வதற்கு தான் தயார் என்று முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரண துங்க தெரிவித்துள்ளார்.**



ஊழல், மோசடியுடன் தொடர்புபடாத - தெளிவான கொள்கையுடைய தரப்புகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்தால் அதனை ஏற்று, சவாலை எதிர்கொள்ளத் தான் தயார் எனவும் அவர் அறிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின்கீழ் போட்டியிட்ட ரணதுங்க தோல்வியைத் தழுவினார். எனினும், கட்சியுடனேயே தொடர்ந்தும் பயணித்தார். ஆனால், கட்சியில் உரிய மறுசீரமைப்புகள் இடம்பெறாததால் ஐ.தே.கவின் உறுப்புரிமையை கடந்த செவ்வாய்க்கிழமை அவர் துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# புத்தளத்தில் திடீரென தீப்பற்றி எரிந்தது மோட்டார் சைக்கிள்!

கொழும்பு, டிசெ. 03

புத்தளம் தில்லையடி பகுதியில் உள்ள இரவு நேர ஹோட்டலுக்கு முன்பாக நேற்று முன் தினம் இரவு 11 மணியளவில் மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற போது தில்லையடி பகுதியில் உள்ள ஹோட்டலில் உணவு எடுத்துச் செல்வதற்காக வருகை தந்த நபரின் மோட்டார் சைக்கிள் ஒன்றே இவ்வாறு தீப்பிடித்துள்ளது.

குறித்த நபர் ஹோட்டலுக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு உணவுத் தேவைகளை முடித்துக் கொண்டு பயணிப்பதற்காக மீண்டும் மோட்டார் சைக்கிளை இயக்கினார்.

இதன்போதே, குறித்த மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பற்றி எரிய ஆரம்பித்ததாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து , குறித்த ஹோட்டல் உரிமையாளர் உட்பட பணியாளர்களும், ஹோட்டலுக்கு வருகை தந்தவர்களும் கூட்டாக இணைந்து சில நிமிடங்களில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆயினும் மோட்டார் சைக்கிள் முழுமையாக எரிந்துள்ளது. எனினும், உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (அ)

# புதிய சுகாதார வழிகாட்டல்கள் இரு வாரங்கள் நடைமுறைக்கு

இலங்கையில் கொரோனாத் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டிருந்த புதிய சுகாதார வழிகாட்டல்கள் நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான புதிய சுகாதார வழிகாட்டல் கோவை நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்தது. நேற்று முன்தினம் தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை பின்வரும் புதிய சுகாதார வழிகாட்டல்கள் அமுலில் இருக்கும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

- திருமண நிகழ்வுகள் நடத்தப்படும் மண்டபங்களில் ஒரே நேரத்தில் 200 பேருக்கு குறைவானவர்களே பங்கேற்க வேண்டும்.
- அலுவலகம், மண்டபம் அல்லது அறை ஒன்றில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு மாத்திரமே தங்கியிருக்க அனுமதி.
- மருந்தகங்கள், சுப்பர் மார்க்கட்டுக்கள் என்பனவற்றில் மூன்றில் ஒரு பகுதியினர் மாத்திரமே ஒரே தடவையில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.
- மொத்த வர்த்தகத்திற்காக மாத்திரம் பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்படுவது அவசியம்.
- சந்தைகள், நடமாடும் வர்த்தக நிலையங்கள் என்பவற்றை சுகாதார அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுத்துச் செல்வது அவசியம்.
- வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் ஒரே தடவையில் 15 பேருக்கு மாத்திரமே அனுமதி.
- திரையரங்குகளில் ஒரே தடவையில் 75 சதவீதமானோருக்கு மாத்திரமே அனுமதி.
- மரண சடங்குகளில் 20 பேர் மாத்திரமே கலந்து கொள்ள அனுமதி.
- வழிபாட்டுத்தலங்களில் இடம்பெறும் நிகழ்வுகள் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய முன்னெடுக்கப்பட வேண்டும்.
- முடியுமான அளவில் ஒன்லைன் மூலம் கூட்டங்களை நடத்த வேண்டும் என்றும் சுகாதார வழிகாட்டல் கோவை வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் அன்றி வேறு எதற்காகவும் வீடுகளில் இருந்து வெளியேற வேண்டாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2022 ஆம் ஆண்டுக்கான பாடசாலை முதலாம் தவணை ஏப்ரல் 18 ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 03

அனைத்துப் பாடசாலைகளுக்கும் 2022 ஆம் ஆண்டின் முதலாம் தவணை ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 2021ஆம் ஆண்டின் பாடசாலைகளின் மூன்றாம் தவணை 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

2021 ஆம் ஆண்டுக்கான பாடசாலை பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் பாடசாலை தவணை முடிவடைவது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா விடுத்துள்ள சுற்றறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள், மாகாணக் கல்விச் செயலாளர்கள், மாகாண, வலய மற்றும் பிரதேச கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கும், பிரிவேனாக்களுக்கும் இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி, 2021 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, 2022 ஜனவரி மாதம் 22 ஆம் திகதி நடைபெறும். க.பொ.த உயர்தரப் பரீட்சை பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மே மாதம் 23 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 1 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளின் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறையை நடைமுறைப்படுத்துவதற்கான அத்தியாவசிய கற்றல் உள்ளடக்கம் குறித்த வழிகாட்டுதல்களில் வெளியிடப்பட்ட ஈ.டி/01/44/01/01-2 மற்றும் 2021.11.09 திகதியிட்ட கடிதம் இரத்து செய்யப்படும்.

தற்போதைய தரங்களில் உரிய பாடத்திட்டங்களை உள்ளடக்குவதற்கு போதிய கால அவகாசம் உள்ளதால், அந்தப் பாடத்திட்டங்களை முழுமையாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 கிறிஸ்மஸ் பண்டிகைக்காக அனைத்து பாடசாலைகளும் டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி விடுமுறை வழங்கப்படும். அந்த விடுமுறையின் பின்னர் டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்.

க.பொ.த உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்காக அனைத்துப் பாடசாலைகளும் 2022 பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி விடுமுறை வழங்கப்படும். எவ்வாறாயினும், இந்த பரீட்சையை நடத்துவதில் ஆரம்பப் பிரிவு வகுப்புகளுக்கு விடுமுறை வழங்காமல் இருக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவடைந்த பின்னர் மார்ச் மாதம் 07 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். சித்திரை புத்தாண்டுக்காக ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படும். முஸ்லிம்களுக்கான நோன்பு காலங்களில் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி முதல் மே மாதம் 3 ஆம் திகதி வரை முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங் கப்பட்டு, மே மாதம் 4 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும். 2021 க.பொ.த க.பொ.த சாதாரண தர மாணவர்களின் கல்வியாண்டு 2022 ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. (அ)

# இறக்குமதியாகும் எரிவாயு தரம் கப்பலில் வைத்தே ஆராயப்படும்

கொழும்பு, டிசெ. 03

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் சமையல் எரிவாயுவினை துறைமுகத்திற்குள் கொண்டுவருவதற்கு முன்னர் கப்பலில் வைத்தே அதன் தரம் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறை நேற்று முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், சந்தைக்கு விநியோகிப்பதற்கு முன்னர் சமையல் எரிவாயு மற்றும் அதன் கொள்கலன்கள் குறித்து அதனுடன் தொடர்புடைய நிறுவனத்தினால் நேற்று முதல் ஆராயப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (அ)

# தலைமன்னார் பாடசாலையில் 12 மாணவர்களுக்கு கொரோனா!

மன்னார், டிசெ. 03

தலைமன்னார் துறை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 12 மாணவர்கள் உட்பட 15 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

தலைமன்னார் வைத்தியசாலையில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளடங்கலாக 50 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது தலைமன்னார் துறை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் 12 பேருக்கும் பெற்றோர்கள் 3 பேர் உள்ளடங்கலாக 15 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர் ஒருவருக்கு தலைமன்னார் வைத்தியசாலையில் ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் குறித்த மாணவருடன் தொடர்புடைய மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போதே பாடசாலை மாணவர்கள் உள்ளடங்களாக 15 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் குறித்த மாணவர்களுடன் தொடர்புடைய மாணவர்களை வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# தலைமன்னார்-இராமேஸ்வரம் இடையே கப்பல் சேவையை ஆரம்பிக்கவேண்டும்

## சபையில் சார்ள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை

கொழும்பு, டிசெ.03

**தலைமன்னார்- இராமேஸ்வரம் இடையிலான கப்பல் சேவையை விரைவில் மீண்டும் ஆரம்பிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சரிடம் அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறித்த கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு இந்திய தரப்பு தயாராக இருக்கின்றது. எனி னும், தாமதம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் நீங்கள் கவனம் செலுத்துங்கள். வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து இதற்கான பணியை விரைவில் ஆரம்பிக்கவும்.

யுத்தத்தால் இந்தியா சென்றவர்கள் இங்கு வர விரும்புகின்றனர்.

விமானத்தை வருவதற்கு சிக்கல் பொருட்களை கொண்டு வரமுடியாது. எனவே, கப்பல் சேவையை ஆரம்பிக்கவேண்டும்-என்றார். (அ)



# ஒரு தொகுதி பைசர் தடுப்பூசி வந்து சேர்ந்தது

கொழும்பு, டிசெ. 03

நாட்டுக்கு நேற்றும் பெருந்தொகை பைசர் தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த தடுப்பூசிகள் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன.

அதற்கமைய, மேலும் 15 இலட்சத்து 3 ஆயிரத்து 450 தடுப்பூசிகள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

இந்த தடுப்பூசிகள் களஞ்சியப்படுத்துவதற்காக நாரஹேன்பிட்டியிலுள்ள இரத்த மாற்று மத்திய நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (அ)

# பிரதமர் மஹிந்தவின் தலைமையில் நத்தார் நினைவு முத்திரை வெளியீடு



கொழும்பு, டிசெ. 03

நத்தார் தின நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கங்காராமை விகாராதிகாரி கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினர் , கலாநிதி செக்டஸ் குருகுலசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்னவினால் நினைவு முத்திரை , முதல் நாள் உறை வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கப்பட்டது.

45 ரூபாய் மற்றும் 15 ரூபாய் பெறுமதியான முத்திரைகளே இவ்வாறு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கணினி விளையாட்டுக்களை உடன் தடை செய்யவேண்டும்

## நளின் பண்டார எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிச். 03

குழந்தைகளை உளவியல் ரீதியாக பாதிப்புக்குள்ளாக்கும் கணினி மற்றும் அலைபேசி விளையாட்டுக்களை தடை செய்யவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கணினி விளையாட்டுகளில் பெரும்பாலான குழந்தைகள் அடிமையாகி உள்ளனர். சில விளையாட்டுக்கள் குழந்தைகளை தற்கொலை வரை இட்டுச் செல்கின்றன.

இவ் விளையாட்டுக்களை தடை செய்வதற்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தவேண்டும்-என்றார். (அ)

# அசாத் சாலி விடுதலை

கொழும்பு, டிச். 03

மேல்மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி விடுதலை செய்யப்பட்டுள்ளார். நேற்று கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அசாத் சாலிக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நவம்பர் 19ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டன.

பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணையின்றி, பிரதிவாதியை விடுதலை செய்யுமாறு அசாத் சாலி சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கமையவே நேற்று அவர் அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் முழுமையாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தாம் உள்ளிட்ட முஸ்லிம் மக்கள் அனைவரும் குர்ஆனில் கூறப்பட்டுள்ள சட்டங்களை மாத்திரமே ஏற்றுக்கொள்வதாகவும் நாட்டில் அமுல்படுத்தப்படும் சட்டங்கள் குறித்து பொருட்படுத்துவதில்லையெனவும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது கடந்த மார்ச் மாதம் 09 ஆம் திகதி அசாத் சாலி பகிரங்கமாக தெரிவித்ததற் கமைய, பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டம் ஆகியவற்றின் கீழ் குற்றமிழைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு சட்டமா அதிபரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# வீட்டினுள் புகுந்த நாகபாம்பை கையினால் பிடித்தார் பெண்!

யாழ்ப்பாணம், டிசெ. 03

கோண்டாவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று முன்தினம் 6 அடி நீளமுள்ள நாக பாம்பு புகுந்துள்ளது.

இதனை அவதானித்த அந்த வீட்டுப்பெண் பாம்பைக் கையால் சர்வசாதாரணமாக பிடித்துள்ளார். எனினும் பாம்பு யாரையும் தீண்டவில்லை. பிடித்த பாம்பு செண்மணி வெளியில் உயிருடன் விடப்பட்டது. (அ-03)

# எரிவாயு சிலிண்டர்களை பரிசோதிக்கவேண்டாம்!

## லிட்ரோ நிறுவனம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 03

சமையல் எரிவாயு சிலிண்டர்களில் சவர்க்கார நுரை மற்றும் பிற பொருட்களைப் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு லிட்ரோ எரிவாயு நிறுவனம் பொதுமக்களிடம் கேட்டுள்ளது.

சவர்க்கார நுரை மற்றும் ஏனைய பொருட்களை பயன்படுத்தி எரிவாயு சிலிண்டரை தனிப்பட்ட முறையில் பரிசோதிப்பது ஆபத்தான நிலை எனவும், கடையில் இருந்து வீட்டுக்கு எரிவாயு சிலிண்டரை கொண்டு வரும்போது சீல் வைக்கப்பட்டு இருக்கவேண்டும் எனவும் நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பணிப்பாளரான ஜனக பத்திரத்ன தெரிவித்தார்.

ஊடக சந்திப்பின்றொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

எவ்வாறாயினும், எரிவாயு சிலிண்டரில் உள்ள சீல் அகற்றப்பட்டால், ஒரு ரெகுலேட்டர் அல்லது பாதுகாப்பு மூடி இணைக்கப்பட வேண்டும் என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# பஸ் கட்டணம் உயரும்?

கொழும்பு, டிசெ. 03

பஸ் கட்டணத்தை குறைந்தபட்சம் 5 ரூபாயால் அதிகரிக்க வேண்டும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. அதன்படி, ஆக குறைந்த பஸ் கட்டணம் 20 ரூபாயாக அதிகரிக்கும் எனவும் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இந்த கட்டண அதிகரிப்பை ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்துமாறும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (அ)

# கடற்படைக்கு காணி வழங்குவதாக நான் ஒருபோதுமே சொல்லவில்லை

## மாதகல் காணி விவகாரம் குறித்து ஆளுநர் விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 03

**மாதகல் காணிகளை கடற்படைக்கு வழங்குவதாக தான் ஒருபோதும் கருத்து தெரிவிக்கவில்லை என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**



கடற்படைக்கு மாதகல் காணிகளை ஆளுநரும் வடக்கு மாகாண ஆளுநரும் உடந்தையாக உள்ளன என தெரிவித்து, சில ஊடகங்களில் நேற்று முன்தினம் செய்தி வெளிகியிருந்தது.

இந்நிலையில், இது தொடர்பில் நேற்று தனியார் நிறுவனத்தின் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ஆளுநர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்று (நேற்று முன்தினம்) நான், காணி உரிமையாளர்களுடன் பேசுவதாக வெளியான செய்தி பிழையானது.

இன்றே (நேற்று) முதன்முதலாக, காணி உரிமையாளர்களுடன் நான் நேரடியாக கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளேன்.

இதற்கமைய, காணி உரிமையாளர்களுடன் பேசி, காணியின் உறுதிகளை சரி பார்த்து, காணி உரிமையாளர்களின் நிலைப்பாடுகளை அறிந்த பின்னரே முடிவுகளை எடுக்க முடியும்-என்றார். (அ-03)

# பம்பலப்பிட்டி வீடொன்றில் எரிவாயு வெடிப்பு!

கொழும்பு, டிசெ. 03

பம்பலப்பிட்டி, ஸ்கூல் மாவத்தையில் உள்ள வீடொன்றில் நேற்றுக் காலை வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. எரிவாயு சிலிண்டர் காரணமாக இந்த வெடிப்புச் சம்ப வம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எரிவாயு சிலிண்டரில் பொருத்தப்பட்டிருந்த ரெகுலேட்டர் பகுதியில் இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக குறித்த வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

சமீபத்தில் குறித்த எரிவாயு நிறுவனம் தங்களது அடுப்பையும் எரிவாயு சிலிண்டர் மற்றும் அதன் ரெகுலேட்டர் ஆகிய வற்றை சோதனை செய்ததாகவும், வெடிப்பு ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இல்லையென குறிப்பிட்டதாகவும் வீட்டின் உரிமையாளர் மேலும் சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும், நேற்று காலை ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் எரிவாயு அடுப்புக்கு அருகில் இருந்த பொருட்கள் சிலவற்றுக்கு மாத்திரம் சேதம் ஏற்பட்டதோடு, வீட்டில் இருந்த எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

# 200 கோப்புகள் மாயம்!

கொழும்பு, டிசெ. 03

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் இருந்த 200 கோப்புகள் மாயமாகியுள்ளன என காணி மறுசீரமைப்பு அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் கலந்துகொண்டு, வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் பாரிய ஊழல் மோசடிகள் நடைபெற்றுள்ளன. இது தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)





# மாதகல் காணி தொடர்பில் ஆளுநர் நேற்று மக்களுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 03

மாதகல் பகுதியில் கடற்படையிரின் பயன்பாட்டுக்கென அளவீடு செய்ய முற்பட்ட காணிகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களை வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

காணி உரிமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களை தனித்தனியாக கலந்துரையாடிய வடக்கு மாகாண ஆளுநர் காணி உரிமம் தொடர்பில் கேட்டறிந்தார்.

சிலரின் காணிகளுக்கான சட்ட ரீதியான உரிமங்கள் இல்லாமை ஆளுநரால் அவதானிக்கப்பட்ட நிலையில் குறித்த விடயம் தொடர்பில் பிரதேச செயலாளர்களை நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார். (அ-03)

# துணைவேந்தர்களின் நியமனங்கள் மூலம் பல்கலை. அமைப்பை அவமதிக்கிறது அரசு!

## லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 03

உள்ளூர் பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் பின்பற்றும் நடைமுறை மற்றும் அளவுகோல் முழு பல்கலைக்கழக அமைப்பையும் அவமதிப்பதாக எதிர்க்கட்சி கூறியுள்ளது.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, தற்போதைய முறைமையை நிறுத்தி அரசாங்கம் தனது தவறுகளை திருத்திக் கொள்ளவேண்டும் என்று கோரினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்விச் சுதந்திரம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டாலும், தற்போது பல்கலைக்கழகங்களுக்கான நியமனங்கள் தன்னிச்சையான முறையில் வழங்கப்படுகின்றன.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் விரிவுரையாளர்கள் வாக்களிப்பின் மூலம் அந்தந்த பல்கலைக்கழகங்களுக்கான துணைவேந்தர்களை தெரிவு செய்தோம்.

தற்போதைய நிர்வாகம் அந்த நடைமுறையை மாற்றி, அதன் துணை நிறுவனங்களுக்கு நியமனங்களை வழங்கி வருகிறது.

உள்ளூர் பல்கலைக்கழகங்களின் தலைவர்களைத் தெரிவு செய்வதற்கான சுதந்திரத்தை அரசாங்கம் வழங்கவேண்டும்-என்றார். (அ)

# எரிவாயு பிரச்னையை மறந்துபோயுள்ளது அரசு

## ஹேஷா விதானகே குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 03

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிவாயு பிரச்னை முழு நாட்டுக்குமான பிரச்னையாக மாறியுள்ள நிலையில், அரசாங்கம் அதனை மறந்துவிட்டு செயல்படுகின்றது என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே எம்.பி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டு வரும் பிரச்னைகளை, நாட்டை ஆட்சி செய்பவர்கள் மறந்துவிட்டு செயற்படுகின்றனர்.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் நீண்ட வரிசையில் காத்திருக்கும் யுகம் காணப்பட்டது.

குறித்த காலப்பகுதியில், சிறிமாவோ பண்டாரநாயக்க உருவாக்கிய பொருளாதார முறைமைக்கு அமைவாக ஒரு கிலோகிராம் அரிசியை வாங்கிக்கொண்டு நடமாட முடியாத நிலைமையே காணப்பட்டது.

உணவுப்பொருட்களுக்கு தடை விதித்தனர். குறிப்பாக ஆடைகளை வாங்கிக்கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டது.

வாகனங்களுக்கு ரயர்களை வாங்கிக் கொள்ள முடியாது.

இந்நிலையில், அவரது ஆட்சி முறைமைக்கு வரலாறு நல்ல ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுத்தது. அதிக பெரும்பான்மையுடன் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு இந்நாட்டை ஆள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது மீண்டும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் யுகம் உருவாகியுள்ளது.

நீண்ட வரிசையில் காத்திருக்கும் யுகம் தற்போது உருவாகி, அது சாதாரண ஒருவிடயமாக மாறிக்கொண்டு செல்கின்றது.

மஞ்சள் தூள், பால்மா, சீனி, இரண்டு கிலோகிராம் அரிசி என்பவற்றுக்கு இன்று நீண்ட வரிசையில் காத்திருக்கும் யுகம் உருவாகியுள்ளது.

பொருட்களை விலைக்கு வாங்கக்கூடியவர்களுக்கு பல பொருள் அங்காடிகள், வியாபார நிலையங்களுக்கு சென்று பொருட்களை வாங்க முடியாத அளவு மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இன்று எமது நாட்டில் பொருளாதாரம் 1970 களுக்கு மீண்டும் சென்றுள்ள நிலைமையை காணமுடிகின்றது.

இது இவ்வாறிருக்க புதிததாக எரிவாயு சிலிண்டர் பிரச்னை உருவாகியுள்ளது.

கடந்த சில வாரங்களாக எரிவாயு சிலிண்டரை பெற்றுக் கொள்ள நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

எரிவாயு சிலிண்டருக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும்போது அரசாங்கம் பல காரணங்களைக் கூறியது.

எரிவாயு தொடர்பிலான பிரச்னை முழுநாட்டுக்குமான பிரச்னையாக உருவாகியுள்ள நிலையில் அரசாங்கம் அதற்கு பதிலளிக்க முடியாமல் திணறுகின்றது-என்றார். (அ)

# மாற்றமடையுமா கிழக்கு மாகாண மீனவர்களின் அவல நிலை?

**மட்டு.நகரான்**

**மீன்பிடித் தொழில் இன்று பல்வேறு சவால்களை வென்று, உலகளவில் பாரிய வருமானம் தரும் துறையாகவுள்ள போதிலும், இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வெளிநாடுகளுக்கு மீன்களை ஏற்றுமதி செய்யும் நிலையுள்ள போதிலும். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இன்று வரை மீனவர்கள் தங்களது அன்றாட வாழ்க்கையினைக் கொண்டு நடத்தக்கூட முடியாத நிலையில்தான் இருக்கின்றர்கள்.**



கிழக்கு மாகாணத்தில் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஏற்பட்ட இழப்புகள் என்பது எண்ணிலடங்காததாக உள்ளது. குறிப்பாக கிழக்கின் கரையோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கையென்பது, இலகுவானதாக இருந்தாலும் துன்ப துயரங்களும் அதிகமாகவே இருக்கின்றன.

யுத்த காலத்தில் இழப்புகளை சாதாரணமாக எதிர்கொண்ட சமூகம், இன்று அந்த இழப்புகளை எதிர்கொள்வதை சாதாரணமாக கொள்ளாத நிலையே இருந்து வருகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் கரையோர மீனவர்கள் வாழ்க்கையானது, போராட்டம் நிறைந்ததாகவே உள்ளது. தமிழ் மீனவர்களின் இந்த நிலைமை பாரிய போராட்டமாக இருந்து வருகின்றது.

இன்று மீன்பிடித் தொழிலானது, பல்வேறு சவால்களை வென்று, உலகளவில் பாரிய வருமானமீட்டும் துறையாகவுள்ள போதிலும், இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வெளிநாடுகளுக்கு மீன்களை ஏற்றுமதி செய்யும் நிலையுள்ள நிலையிலும், கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில், இன்று வரை மீனவர்கள் தங்களது அன்றாட வாழ்க்கையினைக் கொண்டு நடாத்தக்கூட முடியாத நிலையில் உள்ளமையே உண்மையாகும்.

1990 களிலும் அதற்குப் பின்னரான காலப்பகுதியிலும் அதாவது 2000ஆம் ஆண்டு வரைக்கும் தொடர்ச்சியான யுத்தப் பாதிப்புகளைக் கொண்டு தங்களுடைய தொழில்களைச் செய்யமுடியாத நிலையில் கிழக்கு மாகாண மீனவர்கள் இருந்ததோடு, 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட ஓர் இடைவெளியில் தங்களுடைய தொழிலை நல்ல முறையில் மேற்கொண்டிருந்தனர்.

இதன் பின்னர் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக சகல தொழில் வளங்களையும் இழந்து, தங்களுடைய உறவுகளையும் இழந்து, நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

தொடர்ந்து 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போதும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இவ்வாறான பாதிப்புகளை எதிர்கொண்ட போதிலும், மீனவர்களின் வாழ்க்கை என்பது மீளமுடியாத துயரங்களையே சுமந்து நிற்பதைக் காணமுடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் திராய்மடு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட திராய்மடு சுவிஸ் கிராமம் பகுதியிலிருந்து கடந்த 23ஆம் திகதி மீன் பிடிப்பதற்காக கடலுக்கு சென்ற சௌந்தரநாயகம் சுரேஸ்குமார் என்னும் 43வயது மீனவர் சடலமாகவே கரை ஒதுங்கினார்.

அவர் சிறு வயது முதல் கடல் தொழில் மூலம் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்திருந்தார். அதன்மூலமே அவரது வாழ்க்கையினை முன் கொண்டு சென்றார்.

அவருக்கு திருமணமாகி ஐந்து பிள்ளைகள் உள்ளனர். அவரின் மூன்று பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். இரண்டு பெண் பிள்ளைகளும் ஓர் ஆண் பிள்ளையும் கல்வி கற்கின்றனர். இரண்டு பெண் பிள்ளைகளுக்கு வறுமை காரணமாக சிறு வயதிலேயே திருமணம் செய்து வைத்துள்ளார். இதுதான் இங்குள்ள பெரும்பாலான மீனவர்களின் நிலைமை.

உயிரிழந்த மீனவரின் குடும்பமானது, மிகவும் வறிய நிலையில் உள்ளது. இதுவே இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான மீனவர்களின் நிலையுமாகும். குறிப்பாக குறித்த மீனவர் கடலுக்குச் சென்று மீன்பிடித்து வரும் பணத்திலேயே அன்று அந்த வீட்டில் உள்ள பிள்ளைகளுக்கு உணவு வழங்கும் நிலை காணப்படுகின்றது.

இன்று அவர் உயிரிழந்துள்ள நிலையில், குறித்த பிள்ளைகளுக்கான உணவுத் தேவை, கல்விக்கான உதவிகளை வழங்குவதற்கு யாரும் அற்ற நிலையில், அந்தப் பிள்ளைகளும் கல்வியை இடை நடுவே கைவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

இன்று மீனவர்களின் நிலைமை இதுவாகவேயுள்ளது. வடக்கு, கிழக்கில் உள்ள இவ்வாறான மீனவர்களுக்கு கைகொடுக்க வேண்டியது யார் என்ற கேள்வி இங்கே எழுகின்றது. இவ்வாறான மீனவர்களை வைத்துத் தமது வயிறு வளர்க்கும் முதலாளிகள் இவர்கள் இல்லையென்றால் இவர்கள் குடும்பம் தொடர்பில் சிந்திக்கும் நிலையிருக்காது.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 1990ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் எவரிடமும் கையேந்தாதும், எவரது வருமானத்தையும் எதிர்பார்க்காதும் செல்வந்தர்களாக வாழ்ந்த கடற்றொழிலாளர்கள் வாழ்வு, இன்று கேள்விக்குறியான நிலையில் காணப்படுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தம், யுத்தம் எனத் தொடர்ச்சியாக அழிவுகளையும், இழப்புகளையும் எதிர்கொண்டு, மீண்டும் ஒரு புதிய வாழ்க்கையை நோக்கிப் பயணிக்கத் தொடங்கிய மீனவர்கள், இன்று தங்களுடைய வாழ்வாதாரத் தொழிலை சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் செய்யமுடியாத நிலையில் தத்தளிக்கிறார்கள்.

“நிம்மதியாக வாழவேண்டும். எங்களுக்காக உழைக்க வேண்டும் என பல இலட்சம் ரூபாய்க்கு கடன்பட்டு, கடற்றொழில்களை ஆரம்பித்து, இன்று நாங்கள் கடனாளிகளாகவே இருக்கின்றோம். வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் இல்லை. பரம்பரை பரம்பரையாக கடற்றொழிலையே செய்து, அதன் மூலம் வருமான மீட்டி வாழ்ந்த நாங்கள், இன்று இந்தத் தொழில்களை கைவிட்டு, அரபு நாடுகளுக்கும் கொழும்புக்கும் வேலை தேடிச்செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது” எனக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலைமை மாற்றப்படவேண்டும். கிழக்கில் உள்ள தமிழ் மீனவர்களின் நிலைமைகள் தொடர்ச்சியாக பேசப்படும்போதே அவர்களுக்கான ஏதாவது உதவி கைகள் நீளும் நிலையேற்படும்.





கொரோனா தொற்றைத் தவிர்க்க அனைத்து கொரோனா வைரஸ் திரிபுகளுக்கும் ஒரே மாதிரியான அறிவுரைகள் தான்: கைகளைக் கழுவுங்கள், சமூக இடைவெளியை கடைபிடியுங்கள், மக்கள் நெரிசல் மிகுந்த பகுதிகளில் முகக் கவசம் அணிந்து கொள்ளுங்கள், காற்றோட்டமான இடத்தில் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

மிஷெல் ராபர்ட்ஸ்

# 'ஒமைக்ரோன்' திரிபுக்கு எதிராக தடுப்பூசிகள் வேலை செய்யுமா?

புதிதாக பல்வேறு பிறழ்வுகளைக் கொண்ட கொரோனா வைரஸ் திரிபை கண்டுபிடித்துள்ளனர். அந்த திரிபு மிகுந்த கவலை அளிக்கக் கூடியது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

புதிய திரிபுக்கு எதிராக புழக்கத்தில் இருக்கும் கொரோனா தடுப்பூசிகள் வேலை செய்யுமா என்பது தான் தற்போது நம் முன் இருக்கும் மிக முக்கிய கேள்வி.

**புதிய திரிபு**

இந்த உலகில் பல்லாயிரக்கணக்கான கொரோனா வைரஸ் திரிபுகள் இருக்கின்றன. அது எதிர்பார்த்த ஒன்று தான் காரணம், வைரஸ்கள் பொதுவாகவே பிறழக்கூடியவைதான்.

ஆனால், இந்த புதிய ஒமைக்ரோன் கொரோனா திரிபு, முன்பு பரவிக் கொண்டிருந்த உண்மையான கொரோனாவிலிருந்து (ஒரிஜினல் கொரோனா) மிகவும் மாறுபட்டதாக உள்ளது. கொரோனா தடுப்பூசிகள் அனைத்தும் முன்பு பரவிக்கொண்டிருந்த கொரோனாவை (ஒரிஜினல் கொரோனா) அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவை.

ஒமைக்ரோன் திரிபில் மொத்தம் 50 பிறழ்வுகள் உள்ளன. அதில் 32 பிறழ்வுகள் ஸ்பைக் புரோட்டீன் என்றழைக்கப்படும் புரத இழையில் உள்ளன. இந்த ஸ்பைக் புரோட்டின் இழைகள் தான் கொரோனா தடுப்பூசிகளின் இலக்கு.

இது மிகவும் ஆரம்ப காலகட்டம் என்பதால், இப்போது ஒமைக்ரோன் திரிபின் ஸ்பைக் புரோட்டீன்கள் எந்த அளவுக்கு அபாயகரமானவை என குறிப்பிட முடியாது.

**தடுப்பூசிகள் வேலை செய்யுமா?**

தற்போது புழக்கத்தில் உள்ள கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் இந்த திரிபுக்கு கச்சிதமாக பொருந்தி செல்லக் கூடியவை அல்ல. எனவே அத்திரிபுக்கு எதிராக சிறப்பாக செயல்பட முடியாமல் போகலாம் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆக, தற்போது புழக்கத்தில் இருக்கும் தடுப்பூசிகள் ஒமைக்ரோன் திரிபுக்கு எதிராக கொஞ்சம் கூட பாதுகாப்பை வழங்காது என பொருளல்ல.

அல்பா, பீட்டா, காமா, டெல்டா ஆகிய கொரோனா திரிபுகளுக்கு எதிராக தற்போது புழக்கத்தில் இருக்கும் தடுப்பூசிகள் தீவிர உடல்நலக்குறைவு ஏற்படுவதிலிருந்து தடுத்து, நல்ல செயல்திறனோடு பாதுகாப்பு வழங்குகின்றன என்பது நினைவுகூரத்தக்கது.

பரிந்துரைக்கப்படும் அளவுக்கு தடுப்பூசி டோஸ்களை செலுத்திக் கொள்வது, தற்போது புழக்கத்தில் இருக்கும் மற்றும் புதிதாக உருவாகும் கொரோனா திரிபிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவது மிகவும் அவசியம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

தற்போது பிரிட்டனில் கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும்போதும், கொரோனாவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுபவர்களும், அதனால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை முந்தைய கொரோனா அலைகளில் இருந்த எண்ணிக்கையை விட குறைந்திருக்கிறது.

இதற்கு தடுப்பூசித் திட்டத்தின் வெற்றிதான் காரணம் என நிபுணர்கள் கூறுகின்றனர். தற்போது புழக்கத்தில் இருக்கும் தடுப்பூசிகள் புதிய திரிபுக்கு எதிராக செயல்படுமா என்பதை கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் பல்வேறு சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒமைக்ரோன் திரிபில் உள்ள என்ன வகையான பிறழ்வுகள் அதை அதிகமாக தொற்றும் தன்மை கொண்டதாக்கு கிறது, தடுப்பூசிகள் கொடுக்கும் பாது காப்பை எப்படி கடக்கின்றன என்பதை நிபுணர்கள் ஆராய்வர். மேலும் இத்திரிபு அதற்கு முந்தைய திரிபுகளை விட மிக தீவிர நோயை உண்டாக்குகிறதா எனவும் மதிப்பீடு செய்வர்.

கொரோனா திரிபுகளுக்கு எதிராக நமக்கு எப்போது புதிய தடுப்பூசிகள் கிடைக்கும்?

கொரோனா திரிபுகளுக்கு எதிராக புதிய கொரோனா தடுப்பூசிகள் ஏற்கனவே மேம்படுத்தப்பட்டு, பரிசோதனையிலும் உள்ளன.

ஒருவேளை அப்படி ஒரு புதிய கொரோனா தடுப்பூசிக்கான தேவை ஏற்பட்டால், அடுத்த சில வாரங்களில் புதிய தடுப்பூசி கொண்டு வரப்பட்டு முறையாக பரிசோதிக்கப்படும்.

தடுப்பூசி உற்பத்தியாளர்களும் விரைவாக தங்கள் உற்பத்தியை அதிகரிக்க முடியும், மேலும் மருந்து நெறிமுறையாளர்கள் தடுப்பூசிக்கான அனுமதி நடைமுறையை விரைவுபடுத்துவது தொடர்பாகவும் ஏற்கனவே விவாதித்துள்ளனர்.

அனுமதி நடைமுறையை வேகப்படுத்துவது தொடர்பான விவகாரத்தில் எந்தவித சமரசமும் இருக்காது. ஆனால், முதன்முதலில் கொரோனா தடுப்பூசி அறி



முகப்படுத்தப்பட்ட போது இருந்ததை விட, தற்போது தடுப்பூசியை வடிவமைப்பது முதல் அனுமதிக்கப்படுவது வரையான அனைத்து செயல்முறைகளும் வேகமாக இருக்கும்.

**மற்ற திரிபுகள் என்ன ஆயின?**

சுகாதார அதிகாரிகள் மற்ற சில கொரோனா திரிபுகளையும் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

டெல்டா (B.1.617.2): இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த திரிபு, தற்போது உலகம் முழுக்க பரவலாக காணப்படுகிறது. பிரிட்டனில் இந்த திரிபுதான் அதிகம் காணப்படுகின்றன.

ஆல்ஃபா (B.1.1.7): பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த திரிபு, 50 நாடுகளுக்கு மேல் பரவியது.

பீட்டா (B.1.351): தென்னாப்பிரிக்காவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த திரிபு குறைந்தபட்சம் 20 மற்ற உலக நாடுகளிலும் காணப்பட்டது.

காமா (P.1) : பிரேசிலில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த திரிபு பத்துக்கும் மேற்பட்ட உலக நாடுகளில் காணப்பட்டது. பிரிட்டன் அதிகாரிகள் டெல்டா பிளஸ் என்றழைக்கப்படும் AY.4.2 திரிபை கண்காணித்து வருகிறார்கள்.

**கொரோனா திரிபுகள் எத்தனை அபாயகரமானவை?**

எந்த ஒரு கொரோனா திரிபும், பெரும்பகுதியான மக்களுக்கு மிகத் தீவிர உடல் நலக்குறைவை ஏற்படுத்தும் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை.

பொதுவாக வயதானவர்கள் அல்லது மிக மோசமான உடல் நலக்குறைவைக் கொண்டவர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்படும் அபாயம் அதிகம் உள்ளது.

ஒருவேளை ஏதோ ஒரு குறிப்பிட்ட கொரோனா வைரஸ் திரிபு அதிக தொற்றுத்தன்மை கொண்டதாக இருந்தால், அது தடுப்பூசி செலுத்தி கொள்ளாதவர்கள் அதிகம் உயிரிழக்க காரணமாக அமையும்.

பொதுவாக, கொரோனா தடுப்பூசிகள், கொரோனா வைரஸால் மிக தீவிரமாக உடல் நலக்குறைவு ஏற்படுவதிலிருந்து அதிக பாதுகாப்பு வழங்குகிறது. இதில் கவலைக்குரிய கொரோனா வைரஸ் திரிபுகளும் அடக்கம். மேலும் தடுப்பூசிகள் கொரோனா தொற்று ஏற்படும் அபாயத்தையும் குறைக்கிறது. ஆனால் தடுப்பூசிகள் கொரோனாவால் ஏற்படும் அனைத்து அபாயங்களையும் முழுமையாக களைவதில்லை.

கொரோனா தொற்றைத் தவிர்க்க அனைத்து கொரோனா வைரஸ் திரிபுகளுக்கும் ஒரே மாதிரியான அறிவுரைகள் தான்: கைகளைக் கழுவுங்கள், சமூக இடை வெளியை கடைபிடியுங்கள், மக்கள் நெரி சல் மிகுந்த பகுதிகளில் முகக் கவசம் அணிந்து கொள்ளுங்கள், காற்றோட்டமான இடத்தில் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

ஈழநாடு

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

12) எண்பத்தாறாயிரத்து நானூற்று இருபது எனும் எண்ணை இலக்கத்தில் எழுதும் போது இனங்காணக்கூடிய இலக்கங்கள்.

1) இரட்டை எண்களாகும்.
2) ஒற்றை எண்களாகும்.
3) இரட்டை எண்களும் ஒற்றை எண்களும் ஆகும்.

❖ **13, 14 ஆகிய வினாக்களுக்கு தரப்பட்ட பாடலை வாசித்து பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**சுற்றுச்சூழல் எப்பொழுதும்**
**தூய்மையாக ஆனால் தான்**
**குற்றம் குறைகள் இல்லாமல்**
**கூடி வாழ வழி செய்யும்!**

13) பாடலில் கூறப்படும் பிரதான கருத்து யாது?
1) கூடி வாழ்வது தொடர்பாக.
2) குற்றம் குறைகள் இல்லாமல் இருப்பது தொடர்பாக.
3) சுற்றுச்சூழலைத் தூய்மையாக்குவது தொடர்பாக.

14) தூய்மை என்ற கருத்தைத் தரும் சொல்.
1) சுத்தம் 2) அசுத்தம் 3) அழகு

15) 
இப்பெரிய உருளையைப் புள்ளிக்கோட்டின் வழியே துண்டுகளாக வெட்டும்போது கிடைக்கும் புதிய வட்டவடிவமான முகங்கள் எத்தனை?

1) 8 2) 6 3) 3

16) 
இவ்வுருவிலுள்ள செங்கோணம் தொடர்பான கூற்றுக்களில் சரியானது எது?
1) உருவின் உள்ளேயும் உருவின் வெளியேயும் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை சமனாகும்.
2) உருவிற்கு வெளியே 8 செங்கோணங்கள் உள்ளன.
3) உருவின் உள்ளே 16 செங்கோணங்கள் உள்ளன.

❖ **கீழே தரப்பட்ட சம்பவத்திலுள்ள A, B ஆகிய இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை முறையே தெரிவு செய்க.**

17) செல்லிடப்பேசியில் பேசிக்கொண்டு .....A..... ஓட்டுவதால் ஓட்டுநருக்கும் அதில் பயணிப்பவர்களுக்கும் .....B..... அவ்வப்போது பாதிப்புக்கள் ஏற்படுவது வாடிக்கையாகிவிட்டது?
1) கப்பல், பாதசாரிகளுக்கும்
2) விமானம், பாதசாரிகளுக்கும்
3) வாகனம், பாதசாரிகளுக்கும்

❖ **18, 19 ஆகிய வினாக்களிற்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் விழுந்த தாயக்கட்டையினைக் கொண்டு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**



18) இத்தாயக்கட்டையில் ★ இக்குறியீட்டிற்கு எதிரே உள்ள குறியீடாக இருக்கக்கூடியது எது?
1) ▲ 2)  3) ✚

19) இத்தாயக்கட்டையில் எதிர்ப்பக்க முகங்களைச் சரியாகக் காட்டும் குறியீடுகளைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க?
1) ● = ■ 2) ▲ = ■ 3) ★ = ✚

20) கீழே தரப்பட்டுள்ள உருக்களில் ஒரே பாதையில் இரு தடவைகள் செல்லாமல் (கை எடுக்காமல்) வரையக்கூடிய உருவைத் தெரிவு செய்க?

1)  2)  3) 

## விடைகள்

12) 01 13) 03 14) 01 15) 02 16) 03 17) 03 18) 02 19) 01 20) 02

# ராஜபக்ஷக்களின் பலமிக்க ஆட்சியை சஜித் அணியால் கவிழ்க்க முடியாது!

## மிலான் ஜெயதிலக்க எம்.பி. திட்டவட்டம்

கொழும்பு, டிச. 03

**“வாழ்வதற்கான உரிமையை நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள ராஜபக்ஷக்களின் பலமிக்க மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆட்சியை சஜித் தரப்பினரால் கவிழ்க்க முடியாது” என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மிலான் ஜெயதிலக்க தெரிவித்தார்.**

“நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்னையே இன்றைய பெரிய பிரச்னையாகக் காணப்படுகின்றது. நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பதை அனைவரும் மறந்துவிட்டனர்” என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-



“கொரோனா வைரஸ் தொற்றுக்கு முகங்கொடுத்து நாம் இந்த நாட்டை சுமார் ஒன்றரை வருடங்கள் முடக்கியிருந்தோம்.

நாடு கொரோனாப் பெருந்தொற்றை எதிர்கொண்டிருந்தபோது, நாட்டு மக்களது வாழ்க்கையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தீர்மானம் எடுத்தார்.

இதன் காரணமாக வாழ்வாதார முறைமையை ஒரு மட்டத்துக்குக் கட்டுப்படுத்த நேர்ந்தது.

இதன் காரணமாகவே நாட்டை முடக்கி தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தடுப்பூசி செலுத்தியதன் முதல் பலனை மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ளனர்.

இரண்டாவது தடவையாக வாழ்வதற்கான உரிமையை நாட்டு மக்களுக்கு ராஜபக்ஷக்கள் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

தடுப்பூசி நாட்டுக்கு வந்த போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டாம் என்று கூறினார். தடுப்பூசி செலுத்திக்கொள்ளப் போவதில்லை என்றும் கூறினர். எனினும், அவர் திருட்டுத்தனமாகச் சென்று தடுப்பூசி செலுத்திக்கொண்டனர்” என்றார். (இ)

# கொரோனா தடுப்பூசி கொள்வனவில் மோசடி

## பாராளுமன்றத்தில் அமளிதுமளி

கொழும்பு, டிச. 03

கொரோனாத் தடுப்பூசி கொள்வனவில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி. முஜிபுர் ரஹ்மான் முன்வைத்த குற்றச்சாட்டையடுத்து சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கொரோனாத் தடுப்பூசி கொள்வனவில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன எனக் குற்றஞ்சாட்டியதுடன் கொரோனாத் தடுப்பூசிகளின் விலைகளை விடவும் அதிக விலை கொடுத்து வாங்கியது ஏன்? ஆரோக்கியம் குறைந்த தடுப்பூசிகளுக்கு அதிக விலை கொடுத்தது ஏன்? எனவும் கேள்விக்கணைகளை தொடுத்தார்.

இதனால் வெகுண்டெழுந்த ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன மற்றும் அரச தரப்பின் பின்வரிசை எம்.பிக்கள் கடும் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர். முஜிபுர் ரஹ்மான் எம்.பியை உரையாற்றவிடாது இடையூறுகளை ஏற்படுத்தினர். ஒழுங்குப் பிரச்னைகளை எழுப்பியதுடன் ஒரு கட்டத்தில் சபைக்கு நடுவே இறங்கவும் முயற்சித்தனர்.

எனினும், இவை தொடர்பில் அலட்டிக்கொள்ளாத முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தொடர்ந்தும் கொரோனாத் தடுப்பூசிகள் கொள்வனவில் மோசடி செய்யப்பட்ட பணம் எவ்வளவு? யார் யார் பங்கு போட்டீர்கள்? எனக் கேட்டு அரசை கடுமையாக விமர்சனம் செய்து கொண்டிருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, “கஞ்சிப்பானை இம்ரானுக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு என்ன?” என்று விடயத்துக்குப் பொருத்தமில்லாத கேள்வியை எழுப்பிய போது அரச தரப்பினர் “கூ” அடித்துக் கூச்சலிட்டனர்.

இதற்கு பதிலளித்த முஜிபுர் ரஹ்மான் எம்.பி., “உங்களுக்கு அப்படியானவர்கள் நண்பர்கள் என்பதனால்தான் இரவு நேரங்களில் சிறைச்சாலைகளுக்கு மது போதையில் செல்கின்றீர்கள். நீங்கள் அநுராதபுரம் சிறைக்குச் சென்று செய்த வேலை தெரியும்தானே” - என்றார். இதையடுத்து இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை அமர்ந்துவிட்டார்.

இவ்வாறு சுமார் 15 நிமிடங்களுக்கு மேலாக முஜிபுர் ரஹ்மான் எம்.பியின் உரையால் சபை அல்லோலகல்லோலப்பட்டது. (இ)

# இருவேறு வீதி விபத்துக்களில் இரு பெண்கள் பரிதாப மரணம்

கொழும்பு, டிச. 03

இரு வேறு இடங்களில் இடம்பெற்ற இரு விபத்துக்களில் பெண்கள் இருவர் மரணமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு, நிக்கலஸ் மாகஸ் மாவத்தை, தலாதுவ சந்திக்கு அருகில் வானொன்று பாதசாரி பெண்ணொருவரை மோதியதில் அவர் மரணமடைந்தார்.



நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது பெண்ணே உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த பெண் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிசிக்சை பலனின்றி மரணமடைந்தார்.

விபத்துடன் தொடர்புடைய வானின் சாரதியைக் கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குருநாகல் கொழும்பு வீதி, கொழும்பிலிருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த தனியார் பஸ், பாதசாரி பெண்ணொருவர் மீது மோதியதில் பெண் மரணமடைந்தார்.

கடதுன்ன பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயது பெண்ணே உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த பெண் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேருக்கு மாதாந்தம் ரூபாய் 5,000

## புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து

யாழ்ப்பாணம், டிச. 03

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பயிலும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு எம். எம் பவுண்டேசன் நிதியத்தால் ஏ.கே.ஓ புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் மாதாந்தம் ஐயாயிரம் ரூபாய் வழங்கப்படவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டுள்ளது.



உள்நாட்டிலுள்ள தன்னார்வத் தொண்டு நிதியமான எம். எம் பவுண்டேசன் 2018 ஆம் ஆண்டு முதல் ஏ.கே.ஓ புலமைப் பரிசில் திட்டத்தில் பங்குதாரராகச் செயற்பட்டு நாட்டிலுள்ள வசதி குறைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், கலை, கலாசாரப் பணிகளுக்கும், காலநிலை மாற்றத்துக்கெதிரான செயற்பாடுகளுக்காகவும் உதவிகளைப் புரிந்து வருகின்றது. அந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் தெரிவு செய்யப்படும் வருமானம் குறைந்த மாணவர்கள் 50 பேருக்கு முதற்கட்டமாக மாதாந்தம் ஐயாயிரம் ரூபாய் வீதம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதன்படி, பல்கலைக்கழகத்துக்கும், எம். எம் பவுண்டேசன் நிதியத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையில் யாழ். பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோரும், எம். எம் பவுண்டேசன் நிதியத்தின் சார்பில் அதன் முகாமைத்துவ அறங்காவலர் டி. நிமல் மரின்டஸ் மற்றும் அறங்காவலர் நிலங்கா மரின்டஸ் ஆகியோரும் ஒப்பமிட்டடனர்.

இந்த நிகழ்வின்போது யாழ். பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் எஸ். ஐங்கரன், நிதியாளர் கே. சுரேஸ்குமார் ஆகியோரும் உடனிருந்தனர். (இ - 03)

# சாவகச்சேரி நகர சபையின் பட்ஜெட் நேற்று ஏகமனதாக நிறைவேற்றம்

சாவகச்சேரி, டிச. 03

தென்மராட்சி, சாவகச்சேரி நகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நேற்று நிறைவேறியது.

அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டம் நகர சபைத் தலைவர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் நேற்றுக் காலை கூடியது.

18 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி நகர சபையில் நேற்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் தவிர்ந்த அனைவரும் சபைக்குப் பிரசன்னமாகியிருந்தனர்.

இதன்போது தலைவரால் வரவு - செலவுத்திட்டம் சபையில் முன்வைக்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சபையில் பிரசன்னமாகி இருந்த அனைத்து உறுப்பினர்களின் ஏகமனதான ஆதரவோடு அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (இ - 03)

ஈழநாடு





## இராணுவ ஆட்சிக்கு எதிராக சூடான் மக்கள் கொதிப்பு!

### வன்முறைகள் வெடிப்பு!!

கார்டோ, டிசெ. 03

சூடான் இராணுவ அரசுக்கு எதிராக பல்லாயிரக் கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டக்காரர்கள் கார்களை வீதி களின் குறுக்கே நிறுத்தி போக்குவரத்தை தடை செய் துள்ளனர்.

பொலிஸார் போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகையையும் சத்த வெடிகளை பிரயோகித்து வருகின் றனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவத்தினர் மீது கற் களை வீசுவதை முகநூல் காணொலிகள் ஊடக காண முடிந்தது.

ஒக்ரோபர் 25ஆம் திகதி சூடானில் இராணுவம் ஆட் சியை கைப்பற்றியிருந்தது. ஜனநாயக செயல்பாட்டாளர் கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடு மாறு ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கோரிக்கை விடுத்துள் ளனர்.

சூடான் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக் கிப் பிரயோகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் இதுவரை 43 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணு வத்தால் சூழப்பட்ட குடியரசு மாளிகையை முற்றுகை யிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினரால் பதவி நீக்கப்பட்ட முன்னாள் பிரதமர் அப்துல்லா ஹம்டொக்கை மீண்டும் பதவியில் அமர்த்திவிட்டு ஆட்சி அதிகாரங்களை இராணுவத் தினருடன் இணைந்து முன்னெடுப்பது தொடர்பான இராணுவத்தினரின் கோரிக்கைக்கு ஜனநாயக செயற் பாட்டாளர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

முன்னாள் பிரதமர் எங்களில் ஒருவர், நாங்கள் அவரை மதிக்கிறோம், முழுமையான ஜனநாயகம் சூடானில் ஏற்படுத்தப்பட வேண்டும் என ஆர்பாட் டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# உலகை மிரட்டும் ஒமைக்ரோன் அமெரிக்காவுக்குள் நுழைந்தது!

### தொற்றாளி தென்னாபிரிக்கா சென்றுவந்தவர்

நியூயோர்க், டிசெ. 03

அமெரிக்காவில் முதலாவது ஒமைக்ரோன் தொற்று மாறுபாடு கண்டறியப்பட்டுள்ளதாக நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

நவம்பர் 22ஆம் திகதி தென்னா பிரிக்காவிலிருந்து திரும்பிய ஒரு பயணியிடம் கலிபோர்னியா பொது சுகாதாரத் துறையும் சான் பிரான்சிஸ்கோ பொது சுகாதாரத் துறையும் இந்த தொற்றை உறுதிப்படுத்தியதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

50 வயதுக்குட்பட்ட குறித்த நபர், அமெரிக்காவுக்கு வந்த சில நாட்களுக்குப் பிறகு அறிகுறிகள்




உருவாகியதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த நவம்பர் 28ஆம் திகதி அவர் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டதாகவும் நவம்பர் 29ஆம் திகதி அவருக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய் யப்பட் டதாகவும் கலி போர்னியா ஆளுநர் கவின் நியூசோம் தெரி வித்தார்.

முழுமையாக தடுப் பூசி போடப்பட்ட மற் றும் மேம்பட்டு வரும் லேசான அறிகுறிகளைக் கொண்ட அந்த நபர், சுய தனிமைப்படுத்தப்பட் டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. அத்துடன் அந்த நபருடன் நெருங்கிய தொடர்பு உள்ளவர்கள் கோவிட் சோதனை களுக்கு உட் படுத்தப்பட்டுள்ளதா கவும் கூறப்பட்டுள்ளது. (அ)

### 29 நாடுகளை ஆக்கிரமித்த ஒமைக்ரோன்

புதிதாக அடையாளம் காணப்பட்ட ஒமைக்ரோன் வைரஸ் உலக நாடுகளில் வேகமாக பரவி வருகின்றது.

இந்நிலையில், இதுவரை 29 நாடுகளில் இந்த தொற்றுக்குள்ளான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய, மேற்குறிப்பிட்ட 29 நாடுகளிலும் மொத்தமாக 372 பேருக்கு ஒமைக்ரோன் தொற்று உறுதியாகியுள்ளது.

## சீனாவில் இருந்து செயல்பட்டு வந்த 500 பேஸ்புக் கணக்குகள் முடக்கம்!

பீஜிங், டிசெ. 03

பேஸ்புக்கின் மீட்டா நிறுவனம் சீனாவில் இருந்து செயல்படுவதாக அடையாளம் காணப்பட்ட சுமார் 500 போலிக் கணக்குகளை முடக்கியுள்ளது.

அந்த போலிக் கணக்குகளை பயன்படுத்தி கொரோ னாவின் ஆரம்பம் குறித்த பரிசோதனைகள் தொடர்பாக போலியான செய்திகள் பரப்பப்பட்டமை கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. இந்தக் கணக்குகள் சுவிஸ் உயிரியலா ளர் வில்சன் எட்வர்ட்ஸ் என்ற போலியான பெயரில் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. போலிக் கணக்கு களின் உள்ளடக்கங்கள் சீன ஊடகங்கள் மூலம் பரப்பப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## கருக்கலைப்பு உரிமையை இரத்து செய்யவேண்டும்!

### உயர்நீதிமன்றில் மைக் பென்ஸ் கோரிக்கை

நியூயோர்க், டிசெ. 03



அமெரிக்காவில் கருக்க லைப்பை சட்டபூர்வமாக்கிய 1973 ஆம் ஆண்டு 'ரோ'வி வேட்' வழக்கை இரத்து செய்யுமாறு முன்னாள் அமெரிக்கத் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் உயர்நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

இந்த தீர்ப்பு மில்லியன் கணக்கான பிறக்காத குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கும் தவறான முடிவு என்றும் மைக் பென்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் 15 வாரங்களுக்குப் பின்னர் கருக் கலைப்பைத் தடை செய்யும் மிசிமிசிப்பி சட்டத்தின் மீதான வாதங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை உயர்நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளன. இதனை அடுத்து இந்த வழக்கு மீதான தீர்ப்பு அடுத்த கோடையில் வெளி யாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1973 ஆம் ஆண்டு தீர்ப்பு அமெரிக்காவில் பெண் களுக்கு கர்ப்பத்தின் முதல் மூன்று மாதங்களில் கருக் கலைப்பு செய்வதற்கான முழு உரிமையையும், இரண் டாவது மூன்று மாதங்களில் வரையறுக்கப்பட்ட உரிமை களையும் வழங்கியது. (அ)

# வடகொரியாவின் மேம்பாட்டுக்கு போராடுவதற்கு தயாராகுங்கள்!

### அந்நாட்டு மக்களுக்கு கிம் ஜோங் உன் அழைப்பு

பியொங்யாங், டிசெ. 03



பாதுகாப்பு, விவசாயம் மற்றும் கட்டுமானம் உள் ளிட்ட துறைகளில் தொடர்ந்து முன்னேற அடுத்த ஆண்டு மிகப் பெரிய போராட்டத்துக்கு தயாராக இருக்கவேண்டும் என்று வடகொரியத் தலை வர் கிம் ஜோங் உன் தெரி வித்துள்ளார்.

ஆளும் தொழிலாளர் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் நேற்று புதன் கிழமை பேசும்போதே கிம் ஜோங் உன் இவ்வாறு குறிப் பிட்டார்.

நாடு பெரும் பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொண்டுள்ள நிலையிலும் கொள்கை, இலக்கு களை அடைவதிலும், இந்த ஆண்டு தொடக்கத்தில் தான் வெளியிட்ட ஐந்தாண்டு பொருளாதாரத் திட் டத்தை செயற்படுத்துவதிலும் கட்சி வெற்றி பெற்றுள்ளது என்று கிம் ஜோங் உன் கூறினார் என வட கொரியாவின் உத்தியோகபூர்வ ஊடகமான கே.சி.என்.ஏ தெரிவித் துள்ளது. நாட்டின் அரசியல், பொரு ளாதாரம், கலாசாரம் மற்றும் தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட ஒட்டு மொத்த விவகாரங்களில் நேர் மறையான மாற்றங்கள் ஏற்பட் டிருப்பது மிகவும் ஊக்கமளிக்கிறது.

இது வடகொரியாவின் பொரு ளாதாரத்தின் நிலையான முகா மைத்துவம், விவசாயம் மற்றும் கட்டுமானத்துறைகளில் பெரிய வெற்றிகளுக்கு சான்றாகும் என்று கிம் கூறினார்.

பாதுகாப்பு, விவசாயம் மற்றும் கட்டுமானம் உள்ளிட்ட துறை களில் தொடர்ந்து முன்னேற அடுத்த ஆண்டு மிகப் பெரிய போராட் டத்துக்கு தயாராக இருக்கவேண் டும் என்றும் அவர் கருத்து வெளி யிட்டார்.

பொருளாதார ரீதியான முன் னேற்றம் குறித்து கிம் ஜோங் உன் தனது திட்டங்களை வெளியிட் டுள்ளபோதும் உணவு மற்றும் மின்சார பற்றாக்குறையால் வட கொரியா திண்டாடி வருகிறது.

கோவிட் தொற்று நோய் மற்றும் இயற்கைப் பேரழிவுகள் ஆகியவற்றாலும் வடகொரியா பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அணுசக்தி மற்றும் ஏவுகணைத் திட்டங்களால் வட கொரியா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளால் அந்த நாடு அவதியுற்று வருவதாக ஐ.நா. முகவர் அமைப்புக்கள் கூறியுள்ளன.

வடகொரியாவில் இதுவரை கொரோனா தொற்று நோயாளி ஒருவர்கூட அடையாளப்படுத்தப் பட்டதாக அந்த நாடு உத்தியோ கபூர்வமாக அறிவிக்கவில்லை. (அ)



## ஹொண்டூரஸில் முதல் பெண் ஜனாதிபதியானார் சியோமாரா!

டெகுசிகல்பா, டிசெ. 03

இலத்தீன் அமெரிக்க நாடான ஹொண்டூராஸில், முதல் பெண் ஜனாதிபதியாக சியோமாரா காஸ்ரோ தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் புதன்கிழமை வெளியான ஜனா திபதித் தேர்தலின் முடிவுகளின்படி, சியோமாரா காஸ்ரோ 53 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான டெகுசிகல்பா மேயர் நஸ்ரி அஸ்புரா, 34 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

அத்துடன், வெற்றிபெற்ற சியோமாரா காஸ்ரோ வுக்கு நஸ்ரி அஸ்புரா, வாழ்த்து தெரிவித்தார்.

இதன் மூலம் 12 ஆண்டுகளுக்கு பின்னர் ஹொண்டு ரஸில் இடது சாரி கட்சி ஆட்சியை பிடித்துள்ளது. மேலும் இந்த வெற்றியின் மூலம் ஹொண்டூரஸின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையையும் சியோ மாரா காஸ்ரோ பெற்றுள்ளார். 62 வயதான சியோமாரா காஸ்ரோ, முன்னாள் ஜனா திபதி மானுவல் ஜெலயா வின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## தனஞ்சய அபார சதம்

# போராடும் இலக்கை எட்டியது இலங்கை!




மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக இரண்டாவது இனிங்ஸில் தனஞ்சய டி சில்வா அபார சதம் அடித்தார். இதன்மூலம் மேற்கிந்தியத் தீவுகளை விட 279 ஓட்டங்களால் இலங்கை முன்னிலை பெற்றுள்ளது.

இந்த இலக்கின்மூலம் இலங்கை அணி தோல்வியைத் தவிர்த்து போராடக்கூடிய நிலையை எட்டியுள்ளது.

காலியில் நடக்கும் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் நேற்று நடந்தது. மூன்றாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது இலங்கை அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பதும் நிசங்க 21 ஓட்டங்களுடனும், சரித் அசலங்க 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று இருவரும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். 19 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழக்க பதும் நிசங்கவுடன் இணைந்தார் தனஞ்சய டி சில்வா. இருவரும் மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சாளர்களை சிறப்பாக எதிர்கொண்டனர்.

74 பந்துகளில் நிசங்க அரைச்சதம் கடந்தார். இதைத் தொடர்ந்து 66 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் தனஞ்சிய டி சில்வா சிறப்பாக ஆடி தன்னை நிரூபித்த போதிலும், பின்னர் வந்த வீரர்கள் பெரியளவில் தாக்குப் பிடிக்கவில்லை.

எனினும், தனஞ்சய 189 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 100 ஓட்டங்களைப் பெற்றார். இது அவரின் 8ஆவது டெஸ்ட் சதமாகும். சதத்தை தொடர்ந்து தனஞ்சய ஆட்டத்தில் சற்று வேகம் காட்டினார். அவருக்கு துணையாக எம்புல்தெனிய நிலைத்து ஆடினார். இதனால், இலங்கை அணி விரைவாக 300 ஓட்டங்களைக் கடந்தது.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது இலங்கை அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 328 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தனஞ்சய டி சில்வா 259 பந்துகளில் 153 ஓட்டங்களையும், எம்புல்தெனிய 110 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மேற்கிந்தியத்தீவுகளின் பந்துவீச்சில் வீராசாமி பெருமாள் 3, றோஸ்ரன் சேஷ் 2 விக்கெட்களை கைப்பற்றினர். இன்று போட்டியின் இறுதி மற்றும் ஐந்தாம் நாள் ஆட்டமாகும். (ஐ)

## டெஸ்ட் தரவரிசை :

# முதன்முறையாக 10 இடங்களுக்குள் முன்னேறினார் திமுத் கருணாரத்ன

டுபாய், டிசெ. 03

துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தரவரிசையில் இலங்கை அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன முதல் 10 இடங்களுக்குள் முதல்தடவையாக முன்னேறியுள்ளார்.

இதேசமயம் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் பாகிஸ்தான் அணியின் ஷாஹீன் அப்ரிடி முதல் ஐந்து இடங்களுக்குள் முதல் தடவையாக இடம் பிடித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை டெஸ்ட் தரவரிசையை நேற்று வெளியிட்டது. இதன்படி,

903 புள்ளிகளுடன் இங்கிலாந்தின் ஜோ ரூட் முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைத்துள்ளார். இந்நிலையில், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டிகளில் சிறப்பாக விளையாடிய திமுத் கருணாரத்ன காலியில் நடந்த முதல் டெஸ்டில் 147 மற்றும் 83 ஓட்டங்களைப் பெற்றார். இதனால் அவர், நான்கு இடங்கள் முன்னேறி ஏழவாது இடத்தைப் பிடித்துள்ளார்.

இலங்கை அணியின் ஏனைய வீரர்களான அஞ்சலோ மத்தியூஸ் இரண்டு இடங்கள் முன்னேறி 23 ஆவது இடத்தையும் தினேஷ் சந்திமால் நான்கு இடங்கள் முன்னேறி 46 ஆவது இடத்தையும் பிடிததுள்ளனர்.




இதேபோல பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில், 908 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியாவின் பட் கம்மின்ஸ் முதலிடத்தில் தொடர்கிறார். பாகிஸ்தான் அணியின் இடது கை வேகப்பந்து வீச்சாளரான அப்ரிடி மூன்று இடங்கள் முன்னேறி ஜேம்ஸ் அண்டர்சன், ககிசோ ரபாடா மற்றும் நீல் வோக்னர் ஆகியோரை பின்னுக்கு தள்ளி ஐந்தாவது இடத்துக்கு முன்னேறினார்.

இதே நேரத்தில் பாகிஸ்தான் அணி வீரர் ஹசன் அலியும் ஐந்து இடங்கள் முன்னேறி 11 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இதேவேளை கான் பூரில் இந்தியாவுக்கு எதிராக இரு முறை மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் நியூசிலாந்தின் கைல் ஜேமிசன் பந்துவீச்சில் முதல் பத்து இடங்களுக்குள் நுழைந்த புதிய வீரர் ஆக மாறியுள்ளார். (ஐ)




# 40 மடங்கு ஊதிய உயர்வு பெற்ற வீரர்!

புதுடில்லி, டிசெ. 03

ஐ. பி. எல். 2022 போட்டிக்காக கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியில் வெங்கடேஷ் ஐயர் 8 கோடி இந்திய ரூபாய்க்கு தக்க வைக்கப்பட்டார். இது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

ஐ. பி. எல்லில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்காக விளையாடிய தமிழரான வெங்கடேஷ் ஐயர் 10 போட்டிகளில் 4 அரைச்சதங்களுடன் 370 ஓட்டங்களை எடுத்திருந்தார். அத்துடன், 9 ஓவர்கள் பந்துவீசி 3 விக்கெட்களையும் வீழ்த்தியிருந்தார்.

ஐ. பி. எல். தொடரில் கவனம் பெற்ற அவர், நியூசிலாந்துக்கு எதிரான இருபது -20 தொடருக்கும் தெரிவானார். இந்தநிலையிலேயே வெங்கடேஷ் ஐயர் ஐ. பி. எல்லில் அதிக மடங்கு சம்பள உயர்வு பெற்ற வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். ஏனெனில், அவரை 2021 ஏலத்தில் 20 இலட்சம் ரூபாய்க்கே கொல்கத்தா அணி வாங்கியிருந்தது. இப்போது அவர் 40 மடங்கு சம்பள உயர்வை பெற்றுள்ளார்.

இதேபோல, சென்னை அணியில் ருதுராஜ் கெய்க்வாட் 30 மடங்கு ஊதிய உயர்வு பெற்று 6 கோடி இந்திய ரூபாய்க்கு தக்கவைக்கப்பட்டார்.

எனினும், ஐ.பி.எல்லை பொறுத்தவரை வெங்கடேஷ் ஐயர் அதிக மடங்கு ஊதிய உயர்வு பெற்றார். 2015இல் 10 இலட்சம் இந்திய ரூபாய்க்கு வாங்கிய பாண்ட்யாவை, மும்பை அணி 2018இல் 110 மடங்கு ஊதிய உயர்வு வழங்கி 11 கோடி இந்திய ரூபாய்க்கு தக்கவைத்தமையே அதிகூடிய சம்பள உயர்வாக இன்றுவரை உள்ளது. (ஐ)




# ஒருநாள் அணி தலைமையில் தொடர்வாரா விராட் கோலி?

புதுடில்லி, டிசெ. 03

இந்திய அணியின் ஒருநாள் அணியின் தலைவர் பதவியில் விராட் கோலி நீடிப்பாரா இல்லையா என்பது இந்த வாரத்தில் முடிவாகும் என்று தெரிய வருகின்றது.

இந்த வார இறுதியில் இந்திய கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழு கூடவுள்ளது. இதில் ஒருநாள் அணியின் தலைமை, இந்திய அணியின் தென்னாபிரிக்க தொடர் என்பன குறித்து ஆராயப்படவுள்ளன.

2022ஆம் ஆண்டில் இந்தியஅணி மொத்தம் 9 ஒருநாள் போட்டிகளில் மட்டுமே பங்கேற்கிறது. இதில் 3 போட்டிகள் தென்னாபிரிக்காவும், இங்கிலாந்தில் 3 போட்டிகளும், இந்தியாவில் 3 போட்டிகளும் நடக்கின்றன. இந்த 9 போட்டிகளுக்கு மட்டும்தனியாக ஓர் அணித் தலைவரை நியமிக்க வேண்டுமா என்ற கருத்து நிலவுகிறது.

தென்னாபிரிக்கத் தொடரில் இந்திய அணி விளையாடும் பட்சத்தில் 20 முதல் 23 வீரர்கள் வரை டெஸ்ட், ஒருநாள், ரி-20 தொடருக்காகத் தெரிவாகலாம்.

அடுத்த ஆண்டு நடக்கும் 9 ஒருநாள் போட்டிகளுக்குமே கோலியை தலைவராக செயல்பட அனுமதிப்பது, 2ஆவதாக வெள்ளைப்பந்து போட்டிகளுக்கு இரு அணிகளின் தலைவர்களாக ரோஹித் சர்மா, கோலி என இருப்பது குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதால், டெஸ்ட் போட்டிகளுக்கு மட்டும் விராட் கோலி, ஒருநாள், ரி-20 போட்டிகளுக்கு ரோஹித் சர்மாவை நியமிக்கலாம் என கருத்து இருக்கிறது.

ஆனால், கோலி ஒருநாள் போட்டிகளுக்கு அணித் தலைவராக நீடிப்பதும் அல்லது டெஸ்ட் போட்டிகளுக்கு மட்டும் தலைவராக இருப்பதும் இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் சௌரவ் கங்குலி, செயலாளர் ஜெய் ஷா இருவரின் முடிவைப் பொறுத்தே அமையும் என்று தெரிய வருகின்றது. (ஐ)



# ஆணொருவர் பொல்லால் தாக்கப்பட்டுப் படுகொலை

## பஸ் தரிப்பிடத்திலிருந்து சடலம் மீட்பு

கொழும்பு, டிசெ. 03

மாத்தளை பஸ் தரிப்பித்தி டத்துக்கு அருகிலிருந்து ஆண் ஒருவரின் சடலத்தை மாத்தளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பரமநாதன் தினேஷ்குமார் என்ற 35 வயதுடைய நபரின் சடலமே இவ்வாறு மீட்கப் பட்டுள்ளது.

குறித்த நபர் பொல்லால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று மாத்தளை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (இ)

# விடுதி முற்றுகை; இருவர் சிக்கினர்

கொழும்பு, டிசெ. 03

கம்பஹா, நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்கொழும்பு நகரில், ஆயுர் வேத சிகிச்சை நிலையம் என்ற பெயரில் இயங்கி வந்த விபச் சார விடுதி சுற்றிவளைக்கப்பட் டுள்ளதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விபச்சார விடுதியை நடத்தி வந்த நபரும் விபச்சார விடு தியை நடத்துவதற்கு உடந் தையாக இருந்த பெண் ணொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு, கம்பஹா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 41, 37 வயதுகளையுடைய வர்களே இவ்வாறு கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில, நீர் கொழும்பு பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ)




# அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க அனைவரும் ஓரணியில் திரள்க

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறைகூவல்



கொழும்பு, டிசெ. 03

"நாட்டு மக்கள் அனைவரையும் பிச்சைக் காரர்களாக மாற்றுவதற்கு முயலும் இந்த அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க சகலரும் ஓர ணியில் திரள வேண்டும்."

- இவ்வாறு அழைப்பு விடுத் துள்ளார் எதிர்க்கட்சித் தலை வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேம தாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆட் சிக்கு வந்த நாள் தொடக்கம் நாட்டு மக்கள் பல்வேறு பிரச் னைகளை எதிர்கொண்டு வரு கின்றனர். இந்நிலையில், கொரோனாவைக் காரணம் காட்டி இந்த அரசு தப்பிப் பிழைக்க முயல்கின்றது.

எரிவாயு சிலிண்டர் வெடிப்பு பிரச்னைக்கும் கொரோனாத் தொற்றுக்கும் என்ன தொடர்பு உண்டு?

மக்களை மடையர்களாக்கி ஆட்சியை முன்நகர்த்தலாம் என்று ராஜபக்ஷக்கள் கனவு காண்கின்றனர். இதற்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

ஒட்டுமொத்த நாட்டு மக்க ளையும் ஏமாற்றிப் பிழைக்கும் இந்த அரசுக்குத் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும். இந்த அரசை வீட்டுக்கு விரட்டிய டிக்க சகலரும் ஓரணியில் திரள வேண்டும்.

இல்லையேல் இந்த ஆட்சியில் மக்கள் அனைவரும் பிச்சைக்கா ரர்களாகமாறும் நிலைமை ஏற்படும் வறுமை யின் பிடியில் சிக்கி பரிதவிக்கும் நிலைமை உண்டாகும்" - என்றார். (இ)

# நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் நீடித்திருந்தால் முழு இலங்கையையும் விற்பனை செய்திருக்கும்

கொழும்பு, டிசெ. 03

நல்லாட்சி அரசு ஆட்சியில் நீடித்திருந்தால் ஒட்டுமொத்த இலங்கையையே விற்பனை செய்திருக்கும் என்று துறைமுக விவகார அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறை முகம் தொடர்பில் ஆளும் - எதிர்க்கட்சிகளுக்கு இடையில் கடுமையான வாதப் பிரதி வாதங்கள் நேற்று பாராளு மன்றத்தில் இடம்பெற்றன.

இதன்போது, நல்லாட்சி அரசின் காலத்தில் அம்பாந் தோட்டை துறைமுகம் சீனா வுக்கு விற்பனை செய்யப்பட வில்லை என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எனினும், நல்லாட்சி அரசு அம்பாந்தோட்டை துறை முகத்தை விற்பனை செய்து விட்டது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தினார்.

நாட்டின் பிரதான சொத்துக்



களில் ஒன்றாக துறைமுகத்தை இவ்வாறு விற்பனை செய்தமை கண்டிக்கப்பட வேண்டியது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், துறைமுகம் விற் பனை செய்யப்படவில்லை எனவும், 70 ஆண்டுகளுக்குச் சீன நிறுவனமொன்று துறை முகத்தை முகாமைத்துவம் செய் யும் எனவும் ரணில் விக்கிரம சிங்க குறிப்பிட்டார்.

தேவை ஏற்பட்டால் எந்த நேரத்திலும் இந்த உடன்டிக் கையை இரத்துச் செய்துவிட்டு நட்டஈட்டை வழங்கி துறை முகத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

வெளிநாட்டு நிறுவனங் களுக்கு 33 ஆண்டுகளுக்கு மேல் குத்தகைக்கு விடப்படும் சொத்துக்கள் யதார்த்தத்தில் விற்பனை செய்யப்பட்ட தாகவே அர்த்தப்படும் என திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. பதிலளித்தார்.

இந்தநிலையில், நல்லாட்சி அரசு 99 ஆண்டுகளுக்கு துறை முகத்தை குத்தகைக்கு விட்டுள் ளது என இந்த வாதப் பிரதி வாதங்களில் பங்கேற்ற துறை முக விவகார அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித் தார்.

நாம் நினைத்தவாறு உடன டியாகத் துறைமுகத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட் டினார்.

நல்லாட்சி அரசு தொடர்ந் தும் நீடித்திருந்தால் முழு இலங்கையையும் விற்பனை செய்திருக்கும் எனவும் அமைச் சர் ரோஹித அபேகுணவர்த்தன மேலும் தெரிவித்தார். (இ)

## மின் வேலியில் சிக்கி குடும்பஸ்தர் மரணம்

அம்பாறை, டிசெ. 03

அம்பாறை, மஹஓய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போகமுயாய பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒரு வர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

போகமுயாய, மஹாஓயா பிர தேசத்தைச் சேர்ந்த 38 வயது நபரே இவ்வாறு மரணமடைந் தார்.

காட்டு யானைகளின் வரு கையைத் தடுப்பதற்காக சட்ட விரோதமாக அமைக்கப்பட்டி ருந்த மின்வேலியில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்தார்.

இதையடுத்து சட்டவிரோ தமாக மின் வேலியை அமைத்த பெண்ணொருவரைப் பொலி ஸார் கைதுசெய்துள்ளனர்.

போகமுயாய பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பப் பெண்ணே இவ்வாறு கைதுசெய்யப்பட் டுள்ளார். (இ)

# பொலிஸ் சார்ஜன்ட் சடலமாக மீட்பு!

மஸ்கெலியா, டிசெ. 03

மஸ்கெலியா, நல்லதண்ணி பொலிஸ் நிலையத்தில் கடமை யாற்றிய சார்ஜன்ட் ஆனந்த சமரநாயக்க பேராதனைப் பகுதியில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

பேராதனை - கெட்டம்பே பகுதியிலுள்ள ஆற்றிலிருந்தே அவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது..

நல்லதண்ணி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சார்ஜன்ட் ஆனந்த சமரநாயக்க கடந்த நவம்பர் 27ஆம் திகதி மாலை காணாமல்போயி ருந்தார்.

அன்றைய தினம் கட மையை நிறைவு செய்து வீடு செல்வதாக நல்லதண்ணி பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்து சென்ற நிலையில்



அவர் காணாமல்போனார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

55 வயதான இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

இவர் கெலிஓயா - குரு தெனிய பகுதியில் வசித்து வந்துள்ளார். இவர் 36 வருடங் கள் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற் றியுள்ளார். (இ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

மலர்வு
11 - 10 - 1924



உதிர்வு
28 - 11 - 2021

### திருமதி இராசம்மா வைத்திலிங்கம்

யாழ். எழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Mississauga வை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா வைத்திலிங்கம் அவர்கள் 28.11.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற தம்பிமுத்து - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், அன்னலட்சுமி, தங்கராஜா, குண பால சிங்கம், துரைசிங்கம், திருநாவுக்கரசு, ராசலட்சுமி, சிவராசா, பாஸ்கரன், ராசமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம், செல வானந்தமலர், காலஞ்சென்ற புஸ்பராணி, மாலினி, மரியதிரேசா, றஞ்சிதமலர், சிவராசா, சுகுணா, வதனி, உமாகாந்தன் ஆகியோரின் மாமியாரும்,செல்லத்துரை மற்றும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, அண் ணம்மா, பொண்ணம்மா, நாகம்மா, இளையாட்சி ஆகி யோரின் அன்புச் சகோதரியும்,நிமால், அனுபா, பொபி, நிருபா, ஜீவா, கேசவன், பிரசாந், கோபி, சபி, ரொபி, மயூரிஸ், சந்தோஸ், சிந்துஜா, சனன், சயன், மௌனி, சபீரன், டனுஸ்கா, அக்சனா, நிருத்திகா, பிரணவன், லோயினி, மதுசா, கிருத்திகா, மைக்கல் ஆகியோரின் பேத்தியும்,நியோலா, நயோமி, ஆருக்சியா, சிவானி, ரிசானா, சகானா, சத்யன், விதுசன், மாயா, காவியன், அர்ஜீன், கேசினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பார்வைக்கு
Saturday, 04 Dec 2021 6:00 PM - 9:00 PM
Sunday, 05 Dec 2021 9:00 AM - 10:00 AM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

கிரியை
Sunday, 05 Dec 2021 10:00 AM - 12:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

தகனம்
Sunday, 05 Dec 2021 12:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

தொடர்புகளுக்கு :
**துரைசிங்கம் (மகன்)** - +16472429429
**ராசமலர் (மகள்)** - +16477664419

தகவல்:
**குடும்பத்தினர்.**

எரிவாயு அடுப்புகள் வெடிப்பு;

## வீடுகளுக்கு சென்று ஆய்வுகளை மேற்கொள்ளும் விசாரணைக் குழு

கொழும்பு, டிசெ. 03

சிலிண்டர் வெடிப்பு மற்றும் தீப்பரவல் சம்பவங்கள் தொடர்பில் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள குழு நேற்று வீடுகளுக்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டது.

எரிவாயுவுடன் தொடர்புடைய அனர்த்தங்கள் இடம்பெற்ற கொட்டாவ, அத்துருகிரிய ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு சென்று குறித்த குழுவின் உறுப்பினர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

சமையல் எரிவாயு கொள்கலனுடன் தொடர்புடைய மேலும் 35 சம்பவங்கள் நேற்று முன்தினம் பதிவானதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

## சம்பள உயர்வு இல்லையேல் தொழிற்சங்க நடவடிக்கை!

**அரச தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு எச்சரிக்கை**

கொழும்பு, டிசெ. 03

பட்ஜெட் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய மற்றும் மாகாண அரச தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கண்டி அலவத்துகொடவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அதன் பொதுச் செயலாளர் அஜித் கே.திலகரத்ன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்த வருடத்துக்கான பட்ஜெட்டில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அறிவிக்கப்படவில்லை. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிக ரித்துள்ள நிலையில் மேலதிக கொடுப்பனவு வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எனவே, அரச ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் 10,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (அ)

## திருமறைக் கலாமன்ற தினம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 03

திருமறைக் கலாமன்றத்தின் 57 ஆண்டின் ஆரம்பத் தையும், ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரிய சேவியர் அடிகளாரின் 82 அகவையையும் நினைவு கூர்ந்து திரு மறைக் கலாமன்றத்தால் பல நிகழ்வுகள் இன்று வெள்ளிக் கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று காலை 6.30 மணிக்கு இல.17 மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைஞானசுரபி தியான இல்லத்தில் நன்றி வழிபாடும் ,தொடர்ந்து காலை 9.30 மணிக்கு இல238,பிரதான வீதி,யாழ்ப்பா ணத்தில் அமைந்துள்ள கலைத்தூது மணி மண்டபத்தில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

மாலை நிகழ்வாக அமரர் நீ.மரிய சேவியர் அடிக ளாரை அவரது பிறந்தநாளில் நினைவுகூரும் முகமாக “ மரிய சேவியர் அடிகளாரின் நினைவுகளுடன் சிறு பொழுது...“ என்னும் நிகழ்வு மாலை 5.00 மணிக்கு இல,286, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வுகளில் அனைவரையும் பங்குபற்றிச் சிறப் பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத் துள்ளது. (அ)

## அப்பாவி மக்களை படுகுழிக்குள் தள்ளியுள்ள அரசு இனி எதற்கு?

### சமிந்த விஜேசிறி எம்.பி. கேள்வி

கொழும்பு, டிசெ. 03



“இந்த அரசு தங்களது நண்பர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்காக அப்பாவி மக்களைப் படுகுழிக்குள் தள்ளியுள்ளது. இந்த அரசு இனி எதற்கு?”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் பிரிவினர் அணிந்திருக்கும் ஆடைகளை போன்ற ஆடைகளை அணிந்தவாறே வீடுகளில் இன்று பெண்களும் தாய் மார்களும் சமையல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான ஒரு நிலைமை நாட்டுக்கு ஏற்படும் என்று நாம் கனவில்கூட நினைத்ததில்லை.

நாட்டு மக்களின் உடல்களில் ஈக்கள்கூட மொய்க் காத அளவு நாட்டையும் நாட்டு மக்களையும் பாது காப்பார் என்ற மக்கள் அதிகம் நம்பிக்கை கொண்ட ஒரு தலைவரே ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச.

இன்று அவரது இயலாமையும் வெளிப்படுகின்றது. அவர் பெயிலடைந்துள்ளார்.

நாட்டில் தற்போது எழுந்துள்ள உரப்பிரச்சினை தொடர்பில், நாட்டு மக்கள் மிகத் தெளிவாகக் கூறினர். காபனிக் உர விவசாய முறைமை சிறந்தது. எனினும், அது ஒரு முறைமையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண் டும் என்று கூறினர்.

எனினும், மக்களின் கருத்துக்கு இந்த அரசு செவிசாய்க்கவில்லை.

இதன் காரணமாக மரக்கறிகளின் விலை வானளவு உயர்ந்தது. அரிசியின் விலையும் அதிகரித்தது் குறைந்தபாடில்லை. ஏனைய சகல பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

இவை அனைத்தையும் தெரிந்துகொண்டே அரசு இதனைச் செய்தது.

இறுதியில் அரசு என்ன செய்துள்ளது? இரசாயன உரத்தை மீள இறக்குமதி செய்வதற்காகக் கறுப்புச் சந்தைகாரர்களிடம் அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பதிலாக ராஜபக்ஷக்கள் எனும் தொற்றுக்களை வீட்டுக்கு அனுப்புவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்து சமூகத்தில் தற்போது அதிகமாகப் பரவி வருகின்றது என்று நான் நினைக் கின்றேன்” - என்றார். (இ)












இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கவன்,சைரா நரசிம்ம ரெட்டி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10



**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - பெண்கள்,சிறுவர்களுக்கான வன்முறைகள்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்